விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 17 சனிக்கிழமை (30.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 132

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com


46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## கடத்திச் செல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்

# சிவராம் சுட்டுக்கொலை!



சிவராமின் சடலம் கண்டெடுக்கப்பட்ட இடம்...





(கொழும்பு)

**கொழும்பு பம்பலப்பிட்டியில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்ட பிரபல தமிழ் ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பாராளுமன்றத்திற்கு அருகில் உள்ள ஜப்பான் நட்புறவுப் பாலத்திற்குக் கீழே சடலமாக மீட்கப்பட்டார். இத் துயர திகில் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.**

நேற்று முன்தினமிரவு பம்பலப்பிட்டியில் உள்ள றெஸ்ட்ரூரன்ட்டில் இருந்து வெளியே வந்த சிவராமை ஜீப் ரக சொகுசு வாகனமொன்றில் வந்திறங்கிய இனந்தெரியாத குழுவினர் அவரின் வாய்க்குள் துணியைத் திணித்து சத்தம் வெளியே வராதவாறு கடத்திக்கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்ட இவர் கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர் ஜப்பான் நட்புறவுப் பாலத்தடியில் வைத்து நேற்று அதிகாலை சுட்டுக் கொல்லப்பட்டார். தலைப் பகுதியை இலக்கு வைத்து 9 எம்.எம். ரக கைத் துப்பாக்கியால் இவர் சுடப்பட்டுள்ளார். சடலம் காணப்பட்ட இடத்தில் இரு வெற்றுத் தோட்டாக்களை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட சிவராமுக்கு வயது 47. மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் த ஐலண்ட், சண்டே ரைம்ஸ், டெய்லி மிரர், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் தராக்கி என்ற புனை பெயரில் இராணுவ ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் அரசியல் கட்டுரைகளை எழுதியவர்.

பிரபல ஊடகவியலாளரும் இராணுவ ஆய்வாளருமான சிவராம் தமிழ்நெற் இணையத்தள ஆசிரியர் ஆவார். இவர் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவர்.

கடத்தல் சூட்டுச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில் இன்று துக்கதினம்

(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் டி. சிவராமின் கொலையையடுத்து யாழ். குடாநாட்டில் இன்று பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான அழைப்பை தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்துள்ளது.

வர்த்தக நிலையங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் காரியலயங்கள் மற்றும் வீடுகள் என்பவற்றில் கறுப்புக் கொடிகள் பறக்க விடுவதுடன் வீதிகள் எங்கும் தோரணங்கள் மற்றும் வாழைகளைக் கட்டி சோக கீதங்களை இசைத்து துக்கதினத்தை அனுஷ்டிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளுக்கு செல்லும்போது கறுப்புப்பட்டிகளை அணிந்து செல்லுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ச)

## யாழ். ஊடகவியலாளர்கள் இன்று கண்டனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மூத்த பத்திரிகையாளர் டி. சிவராம் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து இன்று காலை 11 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக கண்டனப் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை யாழ்ப்பாண ஊடகவியலாளர் மேற்கொண்டுள்ளனர். இக் கொலையை மேற்கொண்டவர்களை கைதுசெய்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிவராம் படுகொலை புலிகள் கடும் கண்டனம்

(கிளிநொச்சி)

இலங்கை அரசாங்கத்தின் இராணுவப் புலனாய்வுப் பிரிவும் அவர்றோடு சேர்ந்து இயங்குகின்ற ...

## பிரமாண்டமான முறையில் மேதின நிகழ்வுக்கு ஏற்பாடு

(கிளிநொச்சி)

இலங்கை அரசாங்கத்தின் இராணுவப் புலனாய்வுப் பிரிவும் அவற்றோடு சேர்ந்து இயங்குகின்ற ஆயுதக் குழுக்களுமே பிரபல ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் கொலைக்கு காரணம் என தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தர்மரட்ணம் சிவராமின் கொலையைக் கண்டித்து தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசம் பலத்தோடு வளரவேண்டும் என்ற நோக்கில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் தலைமையை ஆதரித்தவர் டி. சிவராம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவராம் ஏற்கனவே (12 ஆம் பக்கம் பார்க்க)

## மேதின நிகழ்வுக்கு ஏற்பாடு

### குடாநாட்டு மக்களை அணிதிரளுமாறு அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினமான மே முதலாம் திகதியை யாழ். குடாநாட்டில் பிரமாண்டமான முறையில் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மே நாள் நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும். பல்வேறு பகுதிகளிலிருந்தும் நல்லூரில் ஒன்றுகூடும் மக்கள் அங்கிருந்து ஊர்வலமாக மருத்துவபீட மைதானத்தை சென்றடைந்து அங்கு மேதின நிகழ்வுகள் இடம் பெறும்.

இவ் மேதினப் பேரணியில் கலந்து கொள்வதற்கு மக்களை அணிதிரளுமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுள்ளது.

மேநாள் நிகழ்வுகளில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சிவராமின் படுகொலைக்கு அரசாங்கம் கடும் கண்டனம்

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு இலங்கை அரசாங்கம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

மூன்று வருடகால யுத்த நிறுத்தத்தின் பின்னர் இடம்பெற்றுவரும் தொடர்ச்சியான வன்முறைகள் மற்றும் அரசியல் படுகொலைகளின் ஒரு. அங்கமாக இது கருதப்படுவதாக ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பயங்கரவாத தடுப்புப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சிவராமின் கொலையை விசாரிக்க பொலிஸ் புலனாய்வுக் குழுக்கள்

(கொழும்பு)

சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்காக பல புலனாய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் மா அதிபர் சந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு பம்பலப்பிட்டியில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட சிவராமின் படுகொலை சம்பவம் பற்றி விசாரணைகளை மேற்கொள்ள புலனாய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதுடன் இரு விசேட பொலிஸ் குழுக்களும் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட பிரதிப் (12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR
your friend in the skies...

யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 0112372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மே 2 - மே 8 வரை கொடி ஏழல் வாரம்

# மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இயன்றளவு நிதியுதவிகளை வழங்குக!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் மே 2 முதல் மே 8 ஆம் திகதி வரை கொடி ஏழல் வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இக்காலப் பகுதியில் கல்வி வளர்ச்சிக்காக இயன்றளவு நிதியுதவிகளை வழங்க உதவுமாறு யாழ். மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவை கேட்டுள்ளது.

இது விடயம் குறித்து கல்வி மேம்பாட்டுப் பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

யாழ்.மாவட்ட மாணவர்களது கல்வித்தரம் மேம்பாடடைய வேண்டியுள்ளதென்பதைக் கல்விமான்கள் புள்ளிவிபர ரீதியான ஒப்பீடுகளுடன் தெரிவித்து வருகின்றனர். இன்றைய உண்மையான் யாழ். மாவட்ட கல்வி நிலையும் அதுவே.

யாழ்.மாவட்ட மக்களுக்கு அழியாத அரும்பொருள் சொத்தாக விளங்கியது கல்வியே. இதனது அடைவு வீழ்ச்சியை வெறும் புள்ளி விபரங்களால் தெரிவிப்பதாலும், அறிக்கைகளை வெளியிடுவதாலும், கவலைப்படுவதாலும் நிவர்த்தி செய்ய முடியாது.

யாழ்.மாவட்ட மாணவர்களது கல்வியடைவு வீழ்ச்சிக்கான காரணங்களை இனம் காண்பதும், இனம் காணப்பட்ட பிரச்சினைகளுக்குச் சாத்தியமான தீர்வைக் காண்பதுமே மிகப் பொருத்தமென பேரவை தீர்மானித்திருக்கின்றது. மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகத்தவர்கள் ஆகியோரிடம் பாரிய கல்விச் சிந்தனை மாற்றம் ஏற்பட வேண்டும். இம்மாற்றத்துடன் மாணவர்கள் இயல்பாகவே கற்கக்கூடிய ஆளணி, பௌதீக வளங்கள், மிக அத்தியாவசியமான பல அம்சங்கள் மேம்படுத்தப்படவேண்டும். இவற்றை யாழ்.மாவட்டத்தில் எல்லாப் பகுதிகளிலும் ஒரேநேரத்தில் ஆரம்பிக்க முடியாது. பகுதி பகுதியாக மிக அத்தியாவசியமாக தேவைப்படும் இடத்திலிருந்து வியாபிக்கப்படவேண்டுமென்று பேரவை எண்ணுகின்றது.

இதற்காகப் பெரும் தொகை நிதி தேவைப்படும். அரசோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ, நலன் விரும்பிகளோ, தற்போது வழங்கிக் கொண்டிருக்கும் நிதி, தேவையின் ஒரு சிறுதுளியே. எனவே, இவற்றை நிவிர்த்தி செய்யவும், மாணவர்களது கல்வியை மேம்படுத்தி, வளமாக்கி தேசத்திற்குப் பொருத்தமானவராக்கவும் ஏதுவாக நிதிசேகரிக்கும் வகையில், எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியை "கொடி ஏழல் நிகழ்விற்கு" ஒதுக்கியுள்ளோம்.

இத்தினத்தில் தங்களை நாடி உண்டியலுடன் வரும் மாணவப்பிரதிநிதிகளுக்கு தங்களால் இயன்ற நிதியுதவியைச் செய்து, முழுநிறைவான செயற்பாடாக, வெற்றிகரமாக நிறைவு செய்ய அள்ளி வழங்கியுதவுமாறு யாழ்மண்ணின் மக்களை யாழ்.மாவட்ட கல்விமேம்பாட்டுப் பேரவை அன்புடன் வேண்டி நிற்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(ரு)

# யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தில் திங்கட்கிழமை சட்டத்துறை ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஆரம்பிக்கப்படவுள்ள சட்டத்துறை கலைப்பீடத்தில் ஒரு துறையாக ஆரம்பத்தில் இருக்குமென்றும் எதிர்காலத்தில் சட்டபீடமாக மாற்றப்படுமென்றும் தெரியவருகின்றது.

சட்டத்துறைக்கு ம.சுதர்சன், செல்வி சி.விக்னேஸ்வரி ஆகியோர் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2004/ 2005 கல்வியாண்டில் 22 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். சட்டத்துறையின் போதனாமொழிஆங்கிலமாக அமையும். எதிர்வரும் 2 ஆம் திகதி முற்பகல 930 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ள சட்டத்துறையின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தலைமையில் இடம்பெறும். இவ் ஆரம்ப விழாவில் கௌரவ விருந்தினர்களாக கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடாதிபதி ந.செல்வகுமாரன், சட்டக்கல்லூரி அதிபர் கலாநிதி எச்.ஜே.எவ். சில்வா, கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி தீபிகா உடகம, கொழும்பு சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் வீ.ரி.தமிழ்மாறன், யாழ்.சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சாந்தா அபிமன்ன சிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து துணைவேந்தரின் தலைமையுரை, கௌரவவிருந்தினர்களின் உரை, சிரேஷ்ட மாணவ ஆலோசகர் உரை என்பன இடம்பெறும்.(ரு)

## இராசிபலன்

**30.04.2005**
**(சித்திரை 17 , சனிக்கிழமை)**
**சப்தமி பின்னிரவு 3.01 மணிவரை**
**உத்தராடம் பின்னிரவு 1.47 மணிவரை**
**இராகுகாலம் 8.58 - 10.28 மணிவரை**
**சுபநேரம் 2.58-4.28 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | அதிகாரம், சுபநிகழ்வு, எடுத்த காரியம் கைகூடும், நன்கொடை. |
| இடபம் | உத்தியோகபங்கம், புத்திரரால் கவலை, வயிற்றுக் கோளாறு, காரிய தாமதம். |
| மிதுனம் | அஜீரணக் கோளாறு, பொருள் விரயம், முயற்சி தடங்கல், வீண் பகை. |
| கடகம் | களஸ்திர நன்மை, மனோ தைரியம், தேகநலன், போசன சுகம். |
| சிங்கம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், கலந்துரையாடல், சுப நிகழ்வு, உடல்நலம். |
| கன்னி | அஜீரண ரோகம், காரிய இடையூறு, சொத்துக்களால் கவலை, பணக்குறைவு. |
| துலாம் | தன்னம்பிக்கைக் குறைவு, தன விரயம், இடமாற்றம், ரோக நிலை. |
| விருச்சிகம் | நற்கீர்த்தி, மாதர் நட்பு, போசன சுகம், காரிய அனுகூலம். |
| தனுசு | சகோதரர் உதவி, அபகீர்த்தி, முயற்சி தாமதம், பண விரயம். |
| மகரம் | மாதர் நட்பு, வெகுமானம், சயனசுகம், ஆழ்ந்த சிந்தை. |
| கும்பம் | சோம்பல் நிலை, சுபசெலவு, வேலைச் சுமை, பிரயாணம். |
| மீனம் | போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, சயன சுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

## சுனாமியால் பாதிப்புற்ற பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்ப நோர்வே நிதியுதவி

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புகின்ற முயற்சிகளுக்காக நோர்வே அரசாங்கம் இலங்கைக்கு 170 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிதயுதவி நாட்டின் அனைத்துப் பாகங்களிலும மேற்கொள்ளப்படும் நிவாரண புனர்வாழ்வு திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்று இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பூகம்ப பேரலைகளினால் இலங்கை வாழ் மக்கள் எதிர்கொள்ளும் அவல நிலை தமது அரசாங்கத்தைப் பெரிதும் கவலை கொள்ள வைப்பதாக நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் தெரிவித்திருக்கின்றார்.

நோர்வேயின் இத்தகைய உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை நீக்குவதற்குப் பயன்படுத்தப்படும் என்று நம்புவதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

அந்த நாட்டு அரசாங்கம் உடனடி நிவாரணப் பணிகளுக்காக ஏற்கனவே 80 கோடி ரூபாவை இலங்கைக்கு வழங்கியிருநதமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (க-5,9)

## கால அவகாசம் நீடிப்பு


(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு இலங்கை அதிபர் சேவை தரம் I இல் பதவிவகிக்கும் அதிபர்களை சேவைமூப்பு அடிப்படையில் பதவியுயர்த்துவதற்காக தகவல்களைச் சேகரிக்கும் பணி இம் மாதம் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

பதவியுயர்வுக் கடிதத்தில் பதவியுயர்வு தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள திகதி பற்றிய விளக்கக் கடிதம் பெற்ற அதிபர்கள் தாங்கள் இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கு பதவியை ஏற்றுக்கொண்ட கடிதத்தின் பிரதியுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விளக்கக் குறிப்பினையும் அனுப்பிவைக்க வேண்டும் என கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி ஆர்.எஸ். பண்டார தெரிவித்துள்ளதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார். (ரு-19)

# நூல் நயம்

இந்து சமுத்திரப்பிராந்தியத்தினைக் கலக்கி ஓய்ந்த டிசம்பர் 26, 2004 சுனாமி, அனர்த்தம் குறித்து வெளிவந்திருக்கும் அறிவியல்சார் விபரணநூல் 'சுனாமி கடற்கோள்' ஆகும்.




புனைகதைசாரா நூல்கள் பலவற்றினை ஆக்கித் தந்த கலாநிதி கந்தையா குணராசா இந்நூலினை ஆக்கித் தந்துள்ளார். இலட்சக் கணக்கான உயிரழிவுகளையும் சொத்தழிவுகளையும் ஏற்படுத்திய சுனாமி அனர்த்தம் பற்றிய அறிவினை அனைவரும் அறிவியல் பூர்வமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய அத்தியாவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

மாணவர்கள் தொட்டு சகலரும் தெரிந்து கொள்ள வேண்டிய தகவல்கள் இந்த நூலில் நிறையவுள்ளன. இயற்கையோடு இயைந்து வாழவேண்டிய அவசியத்தினை இந்த நூல் வலியுறுத்துகின்றது. பன்னிரண்டு அத்தியாயங்கள் இந்த நூலில் உள்ளன. அவற்றில் பத்து அத்தியாயங்கள் அறிவியல் ரீதியான குறிப்புகளாகவும் மிகுதி சம்பவ நிகழ்வுகளாகவும் உள்ளன. விளக்கப்படங்களாகவும் புகைப்படங்களாகவும் நூற்றிற்கு மேற்பட்ட படங்களுள்ளன. சுனாமியிலிருந்து பாதுகாப்பு பற்றியும் ஓர் அத்தியாயம் உள்ளது.

24 மணிநேரம், 12 மணிநேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, களம் பல கண்ட கோட்டை முதலான பல புனைகதைசாரா நூல்களைத் தந்த கலாநிதி க.குணராசாவின் இந்த நூல் காலம் கருதி வெளிவந்திருக்கும் ஆவணமாகும். அனைத்துப் பாடசாலைகளிலும் நூலகங்களிலும் இல்லங்களிலும் இருக்கவேண்டிய நூலாகும். -மகேசன், மாதவன்

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் காலாண்டு கலை இலக்கிய இதழ் "கலைமுகம்" சுனாமி சிறப்பம்சங்களுடன் வெளிவந்துள்ளது.



நீ.மரிய சேவியர், தார்மீகி செல்வி திருச்சந்திரன், வி.பி.தனேந்திரா, யோசப் பாலா, யோண்சன் ராஜ்குமார், க.தியடேர் பாஸ்கரன் ஆகியோரது கட்டுரைகளும் சோ.பதமநாதன், நீர்கொழும்பு தருமலிங்கம், தனா வஷ்ணு, எஸ்.யோகலிங்கம், அல்லி ஜோ.ஜெஸ்ரின், ஜோவான் ஜெனோவா, சூரிய நிலா, எஸ்.ஏ. அருட்செல்வன் ஆகியோரது கவிதைகளும், ந.சந்திரபாலன், செம்பியன் செல்வன், சி.கதிர்காமநாதன் ஆகியோரின் சிறுகதைகளும் இனனும் பலவேறு அம்சங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ரு-51)

## கற்பித்தல் உபகரணப் போட்டி

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட சமூகக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் உபகரணப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பொருத்தமான ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு கோட்டக் கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ரு-7,79)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த க.பொ.த.(உ/த) வகுப்பு மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புகள் சிறுவர் பாதுகாப்பு (இலங்கை) அமைப்பின் அனுசரணையுடன் பருத்தித்துறை கல்விக் கோட்டம் இன்று தொடக்கம் வடஇந்து மகளிர் கல்லூரி, தம்பசிட்டியிலும், சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித் துறையிலும் நடாத்தவுள்ளது.

விஞ்ஞான, வர்த்தக, கலைப் பிரிவுக்கான சகல பாடங்களுக்குமான வகுப்புகள் நடைபெறும். ஆர்வமுள்ள மாணவர்கள் எவரும் இவ் வகுப்புகளில் பங்குபற்றலாம்.

வகுப்புகள் இன்று தொடக்கம் சகல வார இறுதி நாட்களிலும் (சனி, ஞாயிறு) மற்றும் விடுமுறை நாட்களிலும காலை 9.00 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறும்.

நேர அட்டவணை பெறவிரும்பும் மாணவர்கள் வட இந்து மகளிர் கல்லூரியிலும் சிதம்பராக் கல்லூரியிலும் பெற்றுக்கொள்ளலாம். (து)

## விவாத அரங்கு - 8

விடயம்

**நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம்:**

- சீரழிந்துள்ளது.
- சீர்பெற்றுள்ளது.

நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி திரு.சி.சிவநேசன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# அடக்கப்படும் ஓர் இனம் தன்னைத்தானே பாதுகாப்பதன் மூலம் விடுதலையைப் பெறலாம்

இன்னொரு இனத்தினால் அடக்கி ஒடுக்கப்படும் ஓர் இனம் தன்னைத்தானே பேணிப் பாதுகாப்பதன்மூலம் விடுதலையைப் பெறலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார் காரைநகர் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ந.கானகன்.

கடந்த வாரம் காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் கழகத் தலைவர் ந.சிறிபவன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காரைநகர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தொடர்ந்தும் உரையாற்றும்போது,

எமது இளைய தலைமுறையினர் சிலர் தற்போது அகச் சூழல், புறச்சூழல் என்பவற்றிக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்ளாது முற்போக்குச் சமுதாய சிந்தனையில்லாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இதற்கு காரை மத்தி மேம்பாட்டுக கழகம் பல மாற்றங்களை உருவாக்க வேண்டும். இதன்மூலம அழிந்துவிடும் நிலையில் உள்ள எமது பாரம்பரிய கலாசாரம் பாதுகாக்கப்படல் வேண்டும்.

ஏனெனில் அடக்கி ஒடுக்கப்படும் இனம் தன்னைத்தானே பேணிப் பாதுகாத்துக் கொள்ளும்போது அது இன்னொரு இனத்திலிருந்து விடுதலை பெறும்.

இதனால் மனிதாபிமானம், தேசிய உணர்வு, தேசியப்பற்று, பாரம்பரிய கலாசாரம் என்பவற்றுடன் எமது தலைவரின் தலைமையின் கீழ் அனைவரும் சேவை செய்ய முன்வரவேண்டும்.

இவைதவிர, அண்மையில் இக்கிராமத்தில் ஏற்பட்ட தொற்றுநோய் பரவலின்போது இக்கிராம மக்களிற்கு அளப்பரிய சேவையைக் காரைமத்தி மேம்பாட்டுக்கழகம் மேற்கொண்டிருந்தது.

இது பாராட்டப்படவேண்டியதாகும். இதேபோன்று பொதுமககளிற்குத் தேவையான அனைத்து அடிப்படைத் தேவைகளிலும் இக்கழகம் பங்கேற்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய காரைநகர் உதவி அரச அதிபர் க.சிறிமோகனன் தமது உரையில், நாம் அந்நிய நாட்டு உதவிகளை நம்பியிருக்காது எம்மை நாமே விருத்தி செய்ய வேண்டும். இதற்கு மக்கள் மனதில் விழிப்புணர்வு ஏற்படல் வேண்டும்.

இவ்வாறான விழிப்புணர்வு செயற்பாடுகளை காரை மத்தி மேமபாட்டுக் கழகம் போன்ற பொது அமைப்புக்கள் ஏற்படுத்தவேண்டும் எனத் தெரிவித்தார். (க-246)

# மீள்கட்டமைப்பு பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை

## 2ஆம் கட்டப் பயிற்சிகள் விரைவில் ஆரம்பமாகும்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள் கட்டமைப்பு பணிகளை துரிதப்படுத்துவதற்கான 2ஆம் கட்டப் பயிற்சி நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய ஆயிரம் இளைஞர்கள் பயிற்சியில் இணைக்கப்படவுளளதாக திறன் அபிவிருத்தி தொழிற்பயிற்சி அமைச்சர் பிய சேனகமகே தெரிவித்தார்.

அவர்களுக்கு மேசன் வேலை, தச்சு வேலை என்பன குறித்து ஆரம்ப கட்ட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த பயிற்சிகள் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சுனாமி அனர்த தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செயற்படுத்தப்படும் சகல வீடமைப்புத் திட்டத்தின் தரத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படடுள்ளதாகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (க-9)

# பட்டதாரிகளை ஏமாற்றும் அரசின் நடவடிக்கைக்கு ஐ.தே.க கண்டனம்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக தொடர்நதும் ஏமாற்றி வருவதை வன்மையாகத் தாம் கண்டிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

பட்டதாரிகளுக்கு மூன்று மாதங்களுக்குள் நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுப்பதாகக் கூறிய அரசாங்கம் இதுவரை 6ஆயிரம் ரூபாவை மட்டும் வழங்கியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்தின தெரிவித்தார்.

அத்துடன் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சியை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுமாறு அமைச்சின் செயலாளருக்கு கூட்டமைப்பு அரசாங்கம் பணித்திருக்கின்றது எனச் சுட்டிக்காட்டிய அவர் பட்டதாரிகளை 'பயிற்சி' என்ற பெயரில் ஏமாற்றி வருவதற்காகவே அரசு இவ்வாறான உத்தரவைப் பிறப்பித்துள்ளது என்றார். (க-9)

# கைத்தொலைபேசியைப் பயன்படுத்தி சிறைச்சாலைகளில் இருந்தவாறு தகவல்களைப் பரிமாறும் கைதிகள்

(வெலிக்கடை)

வெலிக்கடை. சிறைச்சாலையில் கைதிகளால் பயன்படுத்தப்பட்டு வந்த அதிக எண்ணிக்கையான கையடக்கத் தொலைபேசிகள் சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலக கோஷ்டிகளுடன் தொடர்புடைய கைதிகள் அடைத்து வைக்கப்பட்ட சிறைக் கூடங்களிலிருநதே இந்த தொலைபேசிகள் கைப்பற்றபட்டுள்ளன.

கையடக்க தொலைபேசிகள் மூலம் கைதிகள் வெளியில் உள்ள தமது சகாக்களுடன் தொடர்புகளை வைத்திருந்ததாகவும் சிலர் சிறைக் கூடங்களில் இருந்தவாறே பல்வேறு குற்றச்செயல்களுக்கான பணிப்புரைகளை வழங்கிவந்துள்ளதாகவும் சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் கையடக்கத் தொலைபேசிகளை சிறைச்சாலைக்கு களவாக எடுத்து வருவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் உதவி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் புறூமிமர்சூக் தெரிவித்துளளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் இதற்கு முன்னரும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின்போது பெருமளவு எண்ணிக்கையான கையடக்க தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டிருந்தன.

இத்தொலைபேசிகள் ஏலத்தில் விடப்பட்டு விற்பனை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (க-9)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதி பிரப்பங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்ட ஒளிக்கலை ஒன்றியம் கடந்த புதன்கிழமை நண்பகல் வெகுவிமரிசையாகத் திறந்து வைக்கப்பட்டது. ஒளிக்கலை ஒன்றியத்தின் தலைவர் பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், பொதுச் சுடரினை திரைப்பட இயக்குநர் சச்சி மாஸரர், ஒளிக்கலை ஒன்றிய செயலாளர் சிவசங்கர், ஒளிக்கலை ஒன்றிய பொருளாளர் சிவபாதம், வடமராட்சிக் கோட்ட இணைப்பாளர் திருச்செல்வம், தென்மராட்சிக் கோட்ட இணைப்பாளர் ஜெயம், வலிகாமம் கோட்ட இணைப்பாளர் யோகன், முத்துத்தமபி மகாவித்தியாலய அதிபர் சிவராஜா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தேசியக்கொடியை நிதர்னம் நிறுவனத்தின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் அப்பன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி கலைவிழி ஒன்றிய அலுவலகத்தை நாடாவெட்டி வைபவரீதியாகத் திறந்து வைத்தார்.

சிறப்புரையை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சண்முகலிங்கன், கோட்ட பொறுப்பாளர் செழியன், படப்பிடிப்பு ஆலோசகா சச்சிமாஸரர் ஆகியோர் நிகழ்த்தினர். (ற)

# அரச புலனாய்வாளர் கொலைக்கு கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய புலனாய்வு உத்தியோகஸ்தர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதை தேசப்பற்றுமிக்க தேசிய இயக்கம் கண்டித்திருக்கின்றது.

இத்தகைய சம்பவங்கள் யுத்த நிறுத்தத்தை மீறும் செயல் என்றும் அந்த அமைப்பு வெளியீட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

மேலும் இத்தகைய மோசச் செயல்களை தடுத்து நிறுத்தும் அதிகாரங்கள் பாதுகாப்பு படையினருக்கு வழங்கப்படவேண்டும்.

இது போன்ற சம்பவங்கள் மேலும் இடம்பெறாது இருப்பதற்கான நடவடிக்கையை உடன் எடுக்குமாறு சமாதான முயற்சியுடன் தொடர்புடைய நாடுகளைக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் பொலிஸ் ரி.ஜெயரட்ணத்தைக் காப்பாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கைகளும அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. (க-5)

# கலாசார பேரவை அங்கத்தவர்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கலை கலாசார பேரவை ஒன்றை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, மேற்படி பேரவையில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், நலன்விரும்பிகள் மற்றும் கலை ஆர்வலர்கள் என்போர் இணைந்து கொள்ளமுடியும்.

இக் கலாசாரப் பேரவையில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தத்தமது பிரதேச செயலர்கள் அல்லது உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் தத்தமது பகுதி கலாசார உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு இதற்கான விண்ணபப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ் விண்ணபப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் கலை கலாசார பேரவை, யாழ் மாவட்ட செயலகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (ற-19)

## விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்தேற்றல் இடைநிறுத்தம்

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு, மாகாணப் பரதிப்பணிப்பாளர் பணிமனையில மேற்படி தடுப்பு மருநது முடிவடைந்தமையால் நேற்றுமுன்தினத்திலிருந்து பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தடுப்பு மருந்து கிடைக்கும் பட்சத்தில் பத்திரிகையில் அறிவிக்கப்படும் என யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய. கலாநிதி டாக்டா ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ற)

# பஸ் உரிமையாளர்கள் - ஊழியர்கள் மீது கடுமையான சட்டதிட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

பஸ் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் மீது கடுமையான சட்டதிட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதுகுறித்து தற்போது சட்டங்கள் அமுலில் இருந்த் போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பின்னடைவுகள் காணப்படுவதாக ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி அமல் குமாரகே தெரிவித்தார்.

இதேவேளை பொல்காவல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தனியார் பஸ் விபத்து தொடர்பாக துரித நடவடிக்கைகளை எடுப்பதறகு தீர்மானித்துள்ளதாகவும் அமல் குமாரகே தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் பல உயிரிழப்புகளை ஏற்படுத்திய பஸ் வண்டியின் அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்வதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# தேசிய கலை இலக்கிய பெருவிழா கொழும்பில்!

## நவம்பரில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பெருவிழா எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுளளது.

இதனை முன்னிட்டு பிரதேச செயலகங்கள் ரீதியாகவும் மாவட்ட மட்ட ரீதியாகவும் கடடுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இதற்கமைய ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ரீதியாகவும கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகளை நடாத்தி முதலாம் இடம்பெற்றவர்களின் விபரங்கள் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பின்னர் மாவட்டத்தில் இப் போட்டிகள் நடாத்தப்பட்டு மாவட்டத்தில் 5 பேர் தெரிவு செயயப்பட்டு யூன் 30ஆம் திகதிக்கு முன்னர் இந்த விபரங்கள் மாகாண செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படல வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-19)

# அடிப்படை ஆங்கில பயிர்சி வகுப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ள அடிப்படை ஆங்கில பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குள் அமைந்துள்ள அரச அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களை தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரின் சிபாரி சுடன் உடன் கிடைக்கத்தக்கதாக யாழ்.பிராந்திய ஆணையாளருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மே மாதம் தொடக்கம் 6 மாதங்கள் வரை வாரத்தில் இரு வார நாட்களில் மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை இவ் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை 2004ஆம் ஆண்டில் நடந்த இவ்வாறான அடிப்படை ஆங்கில பயிற்சி வகுப்பில கலந்துகொண்டவர்கள் இதில் கலந்துகொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# நல்லூர் ஆலயத்திற்குரிய 10 பரப்பு நிலம் 50 வருட குத்தகையின் அடிப்படையில் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயத்திற்கு உரித்தான 10 பரப்பு நிலம் 50 வருட குத்தகையின் அடிப்படையில் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

ஏற்கனவே, நல்லூர் ஆலயத்திற்குரிய நிலப்பரப்பை யாழ் மாநகரசபை 50 வருட குத்தகையின் அடிப்படையில் பெற்றிருந்தது.

இதில் 10 பரப்பை தமக்கு கட்டடம் கட்டுவதற்குத் தருமபடி நல்லூர் பிரதேச செயலகத்தினர் கேட்டதற்கமைய நல்லூர் ஆலய நிர்வாகத்தின் உடன்பாட்டுடன் 50 வருட குத்தகைக்கு இந் நிலத்தை வழங்குவதற்கு நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது. (ற-19)

## நிர்வாகிகள் தெரிவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் சங்கத்தாகேணி சித்திவிநாயகர் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த 25ஆம் திகதி புங்குடுதீவு பராசக்தி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்படி தலைவராக சி.சிவகுமாரும், உபதலைவராக சி.கலாநிதியும், செயலாளராக எஸ்.சதீஸ்குமாரும், உப செயலாளராக தஜீவகுமாரும், பொருளாளராக ந.கேதாரனும் தெரிவு செய்யப்பட்டனர். (க-126)

# எமது கண்களைப் பாதுகாப்போம்

சுனாமியின் அனர்த்தங்களிலிருந்து ஒருபடி மீள எழுந்துள்ள எம்மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.

உறவுகள் இழந்து, வாழ்விடமிழந்து, உடமைகள் இழந்து, தொழில் இழந்து நிர்க்கதியாக நின்ற மக்கள் இவ்வளவிற்கு மீள எழுந்துள்ளார்கள் என்று சொன்னால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள உறவுகள் புரிந்த, புரிந்துவருகின்ற மனிதாபிமான உதவிகளே பிரதான காரணம் எனலாம்.

சுகாதார ஒருங்கிணைப்புக் குழுவானது, இந்த அனர்த்த காலத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், மற்றும் உள்ளூர் சுகாதார சேவைகள், தனிப்பட்ட உதவிகள் பலவற்றை ஒருங்கிணைத்து இரவு பகலாக வழங்கிவந்த சேவையானது இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தொற்றுநோய்கள் பரவுவதைப் பெருமளவு தடுத்துள்ளது.

எவ்வாறாயினும், இவ்வாறான சூழ்நிலைகளில் சுவாசத்தொற்று, வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஓரளவு அதிகரித்துக் காணப்படுவது வழமையே.

இதற்கு அனேக காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, மக்கள் இடம் பெயர்ந்து நெருக்கமாக வாழ்கின்றபோது ஒருவரில் இருந்து மற்றவர்களுக்கு நோய்க் கிருமிகள் பரவும் தன்மை கூடுதலாகக் காணப்படுகின்றது.

அத்துடன் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் முழுமையான குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளை உடனடியாக வழங்கமுடியாததாலும் அவர்கள் மத்தியில் நோய் தொற்றுகின்ற தன்மையும் அதிகமாகக் காணப்படுகினறது.

இரண்டாவது பிரதான காரணம், இடம்பெயர்ந்து வாழும் மக்கள் உண்ணுகின்ற உணவானது நிறை உணவாகக காணப்படாததால் அது அவர்களின் உடலின் நோய் எதிர்க்கும் தன்மையை வளர்க்கப் போதுமானதாக இருப்பதில்லை. இதில் பிரதானமாக 'றெற்றினோல்' (Retinol) எனப்படுகின்ற 'விற்றமின் ஏ' சத்துக்குறைவானது பிரதான பங்கினை வகிக்கின்றது. இந்த மக்கள் உண்ணுகின்ற உணவை எடுத்து நோக்கினால் அது நிவாரணமாகக் கிடைக்கும் சோறு மற்றும் பருப்புடன் மிக குறைந்தளவான மரக்கறி வகைகள் மற்றும் மிக மிக குறைவான மீன், இறைச்சி மற்றும் முட்டை என்பன காணப்படுவதால் இதில் இருந்து கிடைக்கும ஊட்டச்சத்துக்கள் அவர்களது உடலை நோய்க்கிருமிகளிலிருந்து பாதுகாக்கப் போதுமானதாக இல்லை.

இதன் காரணத்தாலேயே இந்த இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் குறிப்பாக, குழந்தைகளுக்குச் சுவாசத்தொற்று மற்றும் வயிற்றோட்டம் என்பன அதிகமாகக் காணப்படுகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு சுகாதார அமைச்சானது யுனிசெவ நிறுவனத்தின் உதவியுடன் இலஙகையில் சுனாமியால் பாதிக்கபபட்ட சகல மாவட்டங்களிலும உள்ள ஆறு மாதம் தொடக்கம் ஐந்து வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் இந்த 'றெற்றினோல்' எனப்படும் சக்திவாய்ந்த 'விற்றமின் -ஏ' யினை ஒரு மாத்திரையாகக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 'விற்றமின் ஏ' என்றால் என்ன?

இது மாச்சத்து, புரதம், கொழுப்புச் சத்துப் போல இன்னும ஒரு வகை ஊட்டச்சத்து ஆகும். இது ஆங்கிலத்தில் 'றெற்றினோல்' என அழைக்கப்படுகின்றது. இந்த சத்து வகை மாமிச உணவு வகையில் கூடியளவில் காணப்படுகின்ற போதும், தாவர உணவுகளில் காணப்படும் கரோட்டினோயிடஸ் (Carotenoids) எனப்படுகின்ற பதார்த்தமானது எமது உடலினால் றெற்றினோயிட் ஆக மாற்றப்பட்டு உபயோகிக்கப்படுகின்றது.

## 'விற்றமின் ஏ' ஏன் அவசியம்?

எமது உடலின் சாதாரண வளர்ச்சிக்கு இந்த விற்றமின் ஏ அவசியமாகத் தேவைப்படுகின்றது. அத்துடன் எமது உடலில் புதிய கலங்கள் உருவாக்கப்பட இது அவசியமானதால் உடலின் சுவாச உறுப்பு மற்றும் உணவுக்கால்வாய், இனவிருத்தி அங்கங்கள் என்பன சரியான முறையில் தொழில்பட இந்த விற்றமின் அவசியமாகக் காணப்படுகின்றது. எமது கண்ணின் பார்வைக்கு குறிப்பாக, வெளிச்சம் குறைவான வேளைகளில் பார்க்கும் தன்மையை உணர்வதற்கு இவ் விற்றமின் மிக அவசியம். அத்துடன் இரத்தத்தின் செங்குருதிக் கலங்கள் மற்றும் வெண்குருதிக்கலங்கள் உருவாவதற்கும் இது அவசியமானதால் எமது உடலை நோய்க் கிருமிகளில் இருந்து பாதுகாப்பதற்கு இந்தச் சத்து மிகவும் அவசியமானதாகக் காணப்படுகின்றது.

## 'விற்றமின் ஏ' குறைபாட்டினால் பிள்ளைகளில் ஏற்படும் தாக்கங்கள்

'விற்றமின் ஏ' குறைபாடுள்ள பிள்ளைகள் வளர்ச்சி குன்றி காணப்படுவர். அத்துடன், இவர்களின் நோய் எதிர்ப்புத் தன்மை குறைவாகக் காணப்படுவதால் அடிக்கடி சுவாசத்தொற்று மற்றும் வயிறறோட்டம் என்பனவற்றிற்கு ஆளாகின்றவர்களாகவும் காணப்படுவர். இந்தக் குறைபாடுள்ள பிள்ளைகளின் சிந்திக்கும் ஆற்றல் மற்றைய பிள்ளைகளை விடக் குறைவானதாகக் காணப்படுகின்றது.

அத்துடன் இவர்களின் பார்வை நரம்புகளின் வளர்ச்சி குறைவாகக காணப்படுவதால் மாலைக்கண் அதாவது குறைவான வெளிச்சத்தில் பார்க்கும் தன்மை குறைந்தவர்களாகக் காணப்படுவர். இவர்களின் தோல்கள் காய்ந்து வரண்ட தோற்றத்தை உடையதாகக் காணப்படலாம். இவர்களில் குருதிச்சோகை தன்மையும கூடுதலாகக் காணப்படும்.

## 'விற்றமின் ஏ' குறைபாடு ஏற்படுவதை எவ்விதம் தவிர்த்துக்கொள்ளலாம்

### 1.தாய்ப்பால்

அதிகளவு 'விற்றமின் ஏ'யினைக் கொண்டுள்ளது. எனவே முதல் ஆறு மாதமளவும் தனியே தாய்ப்பாலினை அருந்தும் பிள்ளைகளுக்கு இக்குறைபாடு ஏற்பட மாட்டாது. இதனாலேயே தாய்ப்பால் மாத்திரம் உட்கொள்ளும் பிள்ளைகளுக்குத் தொற்றுநோய்கள் ஏற்படும் தன்மை குறைவாகக் காணப்படுகின்றது. தாய்ப்பாலினுள் உள்ள விற்றமினை அதிகாிக்க பிள்ளை பிறந்து முதல் நான்கு கிழமைக்குள ஒவ்வொரு தாயக்கும் சக்தி வாய்நத 'விற்றமின் ஏ' மாததிரை இரண்டு கொடுக்கப்படுகின்றது.

### 2.'விற்றமின் ஏ' அதிகளவு உள்ள உணவுப் பொருட்களை கூடியளவு உட்கொள்ள வேண்டும் .

சிறியவர்கள் ஆனாலும் சரி, பெரியவர்கள் ஆனாலும் சரி 'விற்றமின் ஏ' நிறைந்த உணவுகளை அதிகளவு உட்கொள்ள வேண்டும். மாமிச உணவு உட்கொள்பவர்களுக்கு இந்தக் குறைபாடு குறைந்த அளவிலேயே காணப்படடாலும் அவர்கள இந்தக் குறைபாட்டைப் போக்கிக்கொள்வதற்கு தங்களது உணவிலே கூடியளவு ஈரல், மீன் ஈரல், இறைச்சி, முட்டை, பால், வெண்ணெய் போன்றவற்றை சேர்த்துக் கொள்வதன் மூலம் இந்தக் குறைபாடு ஏறபடுவதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

தாவர உணவுகளை மாத்திரம் உட்கொள்வோர் தங்களது உணவுடன் பச்சை, மஞ்சள் நிற காய்கறி வகைகள் குறிப்பாக மாம்பழம், பப்பாப்பழம், கரட், பூசிணிக் காய், உருளைக்கிழங்கு, 'வல்லாரை, கங்கூன் போன்றவற்றைக் கட்டாயமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதிலும் குறிப்பாக மாம்பழம், பப்பாப்பழம் போன்றவற்றில் உள்ள 'கரட்டினோயிட' எமது உடலினால் இலகுவாக விற்றமின் ஏ ஆக மாற்றப்படக்கூடியதாக உள்ளது. அத்துடன், இந்த உணவுகளுடன் எண்ணெய் வகைகள் சேர்த்து உண்ணப்படுமானால் இந்த விற்றமின்கள் உடலில் சேரும் அளவு அதிகரிக்கின்றது.

### 3.'விற்றமின் ஏ'மாத்திரையினை ஒழுங்காக உட்கொள்ளுதல்

அதிக அளவு இந்த விற்றமின் ஏ குறைபாட்டிற்கு உள்ளாகின்றவர்கள் சிறுவர்கள் என்பதாலும் அவர்களில் ஏற்படும் இந்தக் குறைபாடானது அவர்களின் வளர்ச்சியிலே பெருமளவு தாக்கத்தை உண்டுபண்ணும் என்பதாலும் இந்த விற்றமின் மாத்திரைகளைச் சிறுவர்களுக்கு வழங்குவதற்கு சுகாதார அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது. இதன அடிப்படையில் ஒவ்வொரு பிள்ளைகளினதும ஒன்பதாம் மாதத்தில் கொடுக்கப்படும் சின்னமுத்துத் தடுப்பு மருந்தினுடனும், பின்னர் பிள்ளையின் ஒன்றரை வயதில் பிள்ளைக்குத் தொண்டைக்கரப்பன், குக்கல், ஈர்ப்புவலி தடுப்பு மருந்து கொடுக்கப்படும் போதும் தலா ஒவ்வொரு மாத்திரைகளும் கொடுக்கப்படுகின்றன.

இதுதவிர, பாடசாலை செல்லும் மாணவர்களிற்கும் அவர்களது முதலாம், நான்காம், ஏழாம் தரங்களிலும் ஒவ்வொரு மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன. இதன் மூலம் சிறுவர்களுக்குத் தேவை யான மேலதிகமான 'விற்றமின் ஏ' ஈடுசெய்யப்படுகின்றது.

இதுதவிர, விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கும் அதாவது இடம் பெயர்ந்த பிள்ளைகள், சிறுவர் விடுதிகளில் உள்ள பிள்ளைகள் போன்றவர்களிற்கும் இந்த மேலதிக 'விற்றமின் ஏ' வழங்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்பதைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஆறு மாதம் தொடக்கம் ஐந்து வயது வரையான எல்லாப் பிள்ளைகளுக்கும் இம்மாதம் முப்பதாம் திகதி 'விற்றமின் ஏ' மாத்திரை கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, யாழ்ப்பாணத்தில் உள்ள சகல பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளுக்குக் குறிப்பிட்ட நாளில் இந்த மாத்திரையினைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்துகொள்ளவேண்டும்.

வைத்திய கலாநிதி
சி.எஸ்.சொலமன்
தாய், சேய் வைத்திய அதிகாரி,
யாழ்ப்பாணம்.

## யார் தகுதியுடையவர்கள்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள ஆறு மாதம் தொடக்கம் ஐந்து வயது வரையான எல்லாப் பிள்ளைகளும் இந்த நாளில் இந்த மாத்திரையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த வருடம் மாசி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் இந்த மாத்திரையைப் பெற்றுக்கொண்ட பிள்ளைகள் மாத்திரம் இந்த நாளில் இந்தக் குளிசையைப் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை.

## எங்கே இதனைப் பெற்றுக்கொள்ளலாம்?

போலியோ சொட்டு மருந்தினைப் பெற்றுககொள்ளும் எல்லா நிலையங்களிலும் இந்த விற்றமின் மாத்திரையை இம்மாதம் முப்பதாம் திகதி பெற்றுக்கொள்வதறகு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளிற்கு அந்தந்த வைத்தியசாலைகளிலேயே இம் மாத்திரையைப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்காலிகமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ளவர்கள் அவர்களிற்கு அருகில் உள்ள தாய், சேய் சிகிச்சை நிலையங்களில் இதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது பற்றிய மேலதிக விபரங்களை உங்களிற்கு அருகில் உள்ள அனைத்துக் குடும்ப நல உத்தியோகத்தாகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

## சுனாமியால் பாதிக்கப்படாதவர்களும் இதனைப் பெறுக்கொள்ள வேண்டுமா?

ஆம், ஒரு வகையில் யாழ்.மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் வாழும் பிள்ளைகள் மத்தியிலும் இந்த விற்றமின் குறைபாடு ஓரளவு அறியப்பட்டுள்ளது. எனவே, இந்த வயதெல்லைக்குள் அடங்குகின்ற எல்லாப் பிள்ளைகளுமே இதைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

## சுகயீனமாக உள்ள பிள்ளைகள் இதனைப் பெற்றுக்கொள்ளலாமா?

ஆம், இந்த வயதெல்லைக்குள் அடங்குகின்ற சுகயீனமான பிள்ளைகள் மற்றும் வேறு விதமான குறைபாடுகள் உள்ள பிள்ளைகள் யாவருமே இதைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இது பற்றிய மேலதிக தகவல்களை உங்கள் குடும்ப நல உத்தியோகத்தாகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். □

(ந-19)

## வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை

(பொன்னாலை)

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக மருத்துவ மாது, மருந்துக் கலவையாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருந்து வருகின்றன.

இதனால், நோயாளர்களுக்கு மருந்து கொடுக்கும் வேலையைத் தாதியர்களும், வைத்திய அதிகாரியுமே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில, இங்கு சிகிச்சை பெற வரும் கர்ப்பிணித் தாய்மார்களும் வேறு வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. (ந-49)

## பஸ் தரிப்பு நிலையம் அமைக்க நடவடிக்கை

(பொன்னாலை)

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பிரதான வீதிப் பகுதியில் கட்டுடைக்குச் சமீபமாக பஸ் தரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இவ் வீதியில் முன்னர் அமைந்திருந்த பஸ்தரிப்பு நிலையம் முற்றாக அழிந்துவிட்டது. இதனால், பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டே மேற்படி சங்கம் பஸ்தரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. (ந-49)

## திருட்டு

(புங்குடுதீவு)

வீட்டு யன்னல் கம்பிகளை உடைத்து தங்க நகை திருடப்பட்ட சம்பவம் புங்குடுதீவில் கடந்த வாரம் இடம்பெற்றது.

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ம.முத்துக்குமாரி என்பவருடைய வீட்டிலே இத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றது. (க-126)

## பொதுக் கூட்டம்

(பொன்னாலை)

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பொதுக்கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் கேட்டுள்ளார். (ந-49)

## திருநாவுக்கரசர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலு[illegible] வெள்ளை[illegible] ஆலய நிர்வாகத்தி[illegible] அனுசரணையுடன் நடாத்தும் திருநாவுக்கரசர் குருபூசை விழா எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி பிற்பகல் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இளைப்பாறிய அதிபர் சைவப்புலவர் கலாபூஷணம் சு.செல்லத்துரை 'என்கடன பணி செய்து கிடப்பதே' எனும் விடயத்தில சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இதில், பண்ணிசை, நடனம், குழுப் பாடல், நாட்டிய நடனம், பண்ணும் பரதமும், இசைக்கச்சேரி மற்றும் வில்லுப் பாட்டு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, மீசாலை மேற்கு நரசிங்க வைரவகாளியம்பாள் தேவஸ்தானத்தில் இருந்து பி.ப.3.00மணிக்கு திருநாவுக்கரசரின் திருவுருவப்படம் மங்கல வாத்தியங்கள் இசைக்க அடியார்களின் திருமுறைப் பண்ணிசையுடன் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

## வருடாந்த ஒன்றுகூடலும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் வருடாந்த ஒன்றுகூடலும் பரிசளிப்புவிழாவும் இன்று சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-19)

# உரிமையுள்ள ஒரு தேசத்திற்காக குரல்கொடுக்க அணிதிரள்வோம்!

(யாழ்ப்பாணம்)

**தமிழர் பிரச்சினைகள்ள சர்வதேச சமூகம் உணர்ந்துவரும் இந்நிலையில் உரிமையுள்ள தேசமொன்றைப் பெறுவதற்காகக் குரல் கொடுக்க மேதினத்த்ல் அனைவரையும் ஒன்றிணையுமாறு பல்வேறு அமைப்புகளும் அறைகூவல் விடுத்துள்ளன.**

### காணாமல் போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தினருக்கான அமைப்பு

உலக தொழிலாளர் வர்க்கம் தமது உரிமைக்காகப் போராடி இரத்தம் சிந்தி வெற்றி கொண்டநாள் மேதினம். அந்த வெற்றி நாளைக் கொண்டாடுகின்ற அனைவருக்கும் எமது மேதின வாழ்த்துக்கள். அத்தோடு இந்நாட்டில் தமிழ் மக்களுடைய பிரச்சினை தர்க்கப்படாத நிலையில் இம் மேதினத்தை எதிர்கொள்கினற நிலையில் வடமாகாண மக்கள் 'உரிமையுள்ள ஒரு தேசத்திற்காக' அணைவரும் ஒன்று திரண்டு ஓங்கிக் குரல் எழுப்பவேண்டும்.

அப்பொழுதுதான் உலகில் எங்கெல்லாம் இனத்தின் பெயரால் தொழிலாளர் வர்க்கம் நசுக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் எமது பிரச்சினை ஒலிக்கும்.

அதேவேளை, குடாநாட்டில் தொழிலாளர்களின் உரிமைகளை மதித்து அவர்களின் தேவைகளை மனிதாபிமானத்துடன் தொழில் வழங்குநர்கள் நோக்க வேண்டும்.

விசேடமாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்தியிருப்பவர்கள் அவர்களை தொழிலாளர்களாக கசக்கிப் பிழிவதை நிறுத்தி. தமிழ் மக்களுக்கு எதிரான கொடிய யுத்தத்தால் அவர்கள் தொழிலுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதை உணர்ந்து செயற்படவேண்டும்.

சிறுவர்களே எமது இனத்தின் எதிர்கால சொதது என்பதை ஏற்றுக்கொண்டு அவர்களை கௌரவமாக நடத்திட சங்கற்பம் கொள்ள வேண்டுமென வேண்டுகிறோம்.

உழைத்து வாழவேண்டும் எனச் சிந்தக்கின்ற அனைவருக்கும் எமது புரட்சிகர மேதின வாழ்த்துகள். வாழ்க தொழிலாளர் வர்க்கம்.

### யாழ்/நல்லூர் மகளிர் அமைப்பின் ஒன்றியம்

மே தினத்தில் தமிழீழப் பெண்களாகிய நாம் அடக்குமுறையிலிருந்து எமது தேசியத்தைக்காக்கும் பொருட்டு அனைவரும் கிளர்ந்தெழ வேண்டியது அவசியமாகின்றது.

போர் நிறுத்த ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளை நிறைவு செய்து விட்ட இன்றைய கால கட்டத்தில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரிவர நிறைவேற்றப்படாமல் சிங்கள பேரினவாத அரசினால் தட்டிக் கழிக்கப்பட்டு வருகின்றது.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிக்க பேரினவாத சக்திகள் தடைசெய்கின்றன. இதனை சிங்கள அரசும் கண்களை மூடிக் கொண்டு பாராமுகமாக இருக்கின்றது.

சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நிவாரணப்பணிகள், புனர்வாழ்வு என்பனவற்றை செயற்படுத்தாமல் அரசு புறக்கணித்து வருகின்றது.

தமிழினத்தின் உணர்வுகளை, சர்வதேச சமூகத்திற்கும், பேரினவாதிகளுக்கும் எடுத்துக் காட்டும் பொருட்டு அனைத்து தமிழீழப் பெண்களும் குரல் கொடுக்க இணைந்து வாருங்கள். எங்களது பேரணியில் அனைவரும் ஒன்று திரண்டு சிங்கள பேரினவாத அரசிற்கு மகளிர் பலத்தை எடுத்துக் காட்டுவதற்கு அனைவரும் அணிதிரள்வோம்!

### யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

உழைக்கும் வர்க்கத்தின் உயிர்ப புத்தினமான மே தினம் தமிழ் மக்களின் எழுச்சி நாளாக மிளிரவைப்பது ஒவ்வொரு தமிழ் மக்களினதும் இன்றியமையாத கடமையாகும்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேல் தமிழினம் பட்ட சோதனைகளும், வேதனைகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் ஓரளவு தணிந்த நிலையில் இருக்கின்றது.

தற்போதைய தேக்கநிலை மீண்டும் யுததம் வருமோ என்ற ஏக்கத்தை தமிழ் மக்கள் மனதில் தோற்றுவித்துள்ளது.

அத்தேக்க நிலையைப் போக்கி நிரந்தர சமாதானமொன்றை ஏற்படுததுவதற்கு, மே தினத்தில் குரல் ஒலிக்கச் செய்வதற்கு சகல வர்த்தகப் பெருமக்களும், வர்த்தக தொழிலாளர்களும் அலை அலையாகத் திரண்டு பங்குபற்றி தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்கு எம்மை அர்ப்பணிப்போம்.

### கோப்பாய் பிரதேச சுகாதார தொண்டர் சங்கம்

சுதந்திரம் பெற்ற ஓர் இனத்திற்கு மேதினம் ஒரு கொண்டாட்டம். சுதந்திரம் அடையாத இனத்திற்கு மேதினம் மனித உணர்வலைகளைத் தட்டி எழுப்பும் ஒரு உந்து சக்தியாகவே இருந்து வருகின்றது. இதற்கு உதாரணம் தேட உலகெங்கும் அலைய வேண்டியதில்லை. இலங்கையே இதற்குப் போதுமானது. இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் தொட்டு தமிழினத்தின் மீது அதன் அரசாங்கங்கள் அடக்குமுறைகளைத் தொடுத்துவந்தது.

அதனை எதிர்த்து எத்தனையோ சக்திகள், அமைப்புக்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டன. உச்சக்கட்டமாக எமது மக்கள் தேசியத் தலைவரின் தலைமையின் கீழ் அணிதிரண்டு தமிழர் தாயகம், தன்னாட்சி, சுயநிர்ணயம் ஆகியவற்றின் அடிப்படையில் விடுதலைப் போராட்டத்தை சர்வதேசமயப்படுத்தி இருக்கின்றார்கள்.

தமிழர் தாயகம் தேசியத் தலைவரின் வழி நடத்தலின் கீழ் பல வெற்றிகரமான மேதின ஊர்வலங்களை நடாத்தியிருக்கின்றது. இன்றைய நிலையில் தமிழீழ விடுதலை போராட்டமும் அதன் யதார்த்த நிலைகளும் சர்வதேச மட்டத்தில் அரசியல் சாசன சிருஷ்டிகர்த்தாக்களையும் கூட நேரிய வழியில் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றது.

கடந்த காலத்தின் பேச்சுவார்த்தைகளும் இணக்கப்பாடுகளும் இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறைத் தத்துவங்களின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைய நிலையில் தமிழீழத் தேசியத் தலைவரால அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்த அறிவிப்பிற்குப்பின்னர் ஏற்பட்ட ஐ.தே. கட்சி அரசுடனான பேச்சுவார்த்தை இன்று வரை தொடரவும் முடியாமல் நிறுத்தவும் முடியாமல் அரசாங்கம் திணறுகின்றதே. அதன் காரணம் என்ன?

சர்வதேச மட்டத்தில் எமது தாயகத்தின் நியாயமான கோரிக்கைகள் ஏற்புடையதாக இருப்பதனாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாமலும், மறுக்கவும் முடியாமலும் சர்வதேசம் எம்மை விழித்துப் பார்த்துக் கொண்டிருப்பதும் எமது விடுதலைப் போராட்டத்திற்கும் அதிகப்படியான அங்கீகாரம் என்றே சொல்லலாம்.

ஆகவே, தமிழர் பெருமக்களே! சிந்திப்போம் செயற்படுவோம் எதிர்வரும மேதின ஊர்வலத்தில் அனைவரும் அணிதிரண்டு எமது எழுச்சியை அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் காட்டுவோம். தமிழர் தேசியம், அதற்கொரு சுயநிர்ணய உரிமை என்பன அரசியல் சித்தாந்தத்தின் சாதகமான சட்டங்கள் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுவோம்.

அரசே! இடைக்காலத் தன்னாட்சி அதிகாரம் வருவது உன்னைக் கொல்லவல்ல; கொல்லவல்ல என்று எடுத்துரைப்போம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மத்தியில் இருந்த அரசியல் சாயங்கள் எல்லாம் ஆழிப் பேரலையில் கரைந்து போயின. மூவினங்களையும் போட்டு நசுக்கிப் பிழிந்து விட்ட பேரழிவுகளுக்கு அகில உலகமெங்கிலுமிருந்து மனிதாபிமான உதவிகள் கோடிக்கணக்கில் வந்து சேர்ந்தன. அதனைச் சரியாகப் பங்கீடு செய்ய அரசுக்கு இஷ்டமில்லை.

பொதுக்கட்டமைப்பு என்ற பேச்சு உருவானது. ஆனால்இன்று அதனைத் தத்தமது இலாபங்களுக்காகப் பயன படுத்தப்பார்க்கிறது பேரினவாதம்.

எனவே, பொதுக்கட்டமைப்பு என்பது அரசியல் இல்லை என்பதையும் அரசுக்கு எடுத்துரைப்போம்.

இதன் அடிப்படையில் இடைக்கால நிர்வாகசபை கோரிக்கையை முன்வைப்பதுடன், சுனாமியால் பாதிக்கப்படட வடக்கு-கிழக்கை பொதுகட்டமைப்பின் ஊடாக சரிநிகர் சமனாக்கி மீளக்கட்டியெழுப்ப வேண்டும் எனபதையும் வலியுறுத்தி தொழிலாளாகள், உழைப்பாளிகள், தமிழர் பெருமக்கள், சுகாதாரத் தொண்டர்கள் அனைவரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாபெரும் பேரணியிலும் அதனைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் எழுச்சி மிகு மேதினக்கூட்டத்திலும் பங்குகொள்ளுமாறு அறைகூவல் விடுக்கின்றோம்.

எனவே, ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அனைத்து சுகாதாரத் தொண்டர்களையும் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### கிளிநொச்சி மாவட்ட தொழிற் சங்கங்களின் ஒன்றியம்

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையையும் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டையும் தமிழரின் சுதந்திர தாகத்தையும் ஒன்றுபட்ட சக்தியாக வெளிப்படுத்தும் நாளாக இம் மே நாள் அமையும்.

இன்று தமிழ் மக்களுடைய உரிமைகளை நசுக்குவதற்குத் தென்னிலங்கை வகுப்புவாத சக்திகளும் அரசும் கங்கணம் கட்டி நிற்கின்றது. இவ் விடயத்தில் ஹெல உறுமய, ஜே.வி.பி போன்ற சக்திகள் பலமாகக் குரல் எழுப்புகின்றன. இருப்பினும், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் இச் சலசலப்பிற்கு அஞ்சாது தமிழ் மக்களுடைய உரிமையை வென்றெடுபபதற்காக முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார். அவரது வழிகாட்டலில் எமது தேசியம, பாரம்பரியம் ஆகியன பாதுகாக்கப்பட்டு ஒன்றுபட்ட சக்தியாக நாம் இன்று விளங்குகின்றோம்.

இது கடந்த பொதுத் தேர்தல் மூலம் நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில், சுனாமி கடல்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக பொதுக் கட்டமைப்பை கூட இன்றைய அரசு உருவாக்க முடியாத அவல நிலையில் உள்ளது. இந்நிலையில், எவ்வாறு தமிழ் மக்களுடைய உரிமையை அரசு வழங்கப் போகின்றது? மேலும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத்தை எவ்வாறு வழங்கப்போகின்றது? எனவேதான் தமிழ் மக்களாகிய நாம் ஒன்றுபட்டு எம் உரிமைகளை வெல்ல குரல் கொடுப்போம். உரிமைக்காக அணிதிரள்வோம்.

சமாதான காலத்திலும் எமது மக்களுக்கான அடிப்படை வசதிகள் கிடைக்கவில்லை. எமக்கான உரிமையினை வென்றெடுப்பதற்கு தேசியத் தலைவரின் கரங்களைத் தமிழ் மக்களாகிய நாம் ஒன்றுபட்டு பலபபடுத்துவோமாயிருந்தால் எமது உரிமையை வெகுவிரைவில் பெற்றுக் கொளள முடியும். உரிமைகளை வெல்லக் குரல் கொடுப்போம். எமது எழுச்சியை வெளிப்படுத்துவோம்.

மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறும் அரசாங்கம், ஆட்சியைக் கைப்பற்றும் வரை ஒன்றும், கைப்பற்றிய பின ஒன்றுமாக பேசி தமிழ் மக்களின் வாழ்வை சீரழித்த வண்ணம் [illegible] என. இனிமேலும் இருபெரும் [illegible] வாத கட்சியினரும் தங்கள் [illegible] முன்வைப்பார்களா? [illegible] பேரினவாத ஆட்சியாளர்கள் தீர்வு எதனையும் செய்யப்போவதில்லை என்பது வரலாற்று உண்மை.

எமது தேசியத் தலைவரின் காலத்தில் தமிழீழம் [illegible] சுதந்திரத்துடன் வாழ [illegible] மக்களும் குரல் கொடுப்போம். இந்த எழுச்சி நாளாக இம் [illegible] நாள் விளங்கட்டும்! (ற)

## ஜனநாயகத்தின் அடிப்படையை அரசாங்கம் மீறிச் செயற்படுகிறது

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மேல் மாகாண சபையில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக அரசாங்கம் செயற்படும் முறை ஜனநாயகத்தின் அடிப்படையை மீறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண சபையைக் கலைதது தேர்தல் ஒன்றை நடாத்த வேண்டும். அல்லது பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்துக்கு ஏற்ப முதலமைச்சரை நியமிக்க வேண்டும். இல்லாவிடின், மாகாண சபையைக் கலைத்துவிட்டு தேர்தல் ஒன்றை நடாத்தி முதலமைச்சரை தெரிவு செய்யவேண்டும்.

கூட்டமைப்பு அரசாங்கம் ஜனநாயகத்தின் அடிப்படையை கூட



மீறியுள்ளமை மேல் மாகாண சபையில் ஏற்பட்டுள்ள நிலைமையின் மூலம் தெரியவருகின்றது.

அத்துடன், அரசாங்கம் மாகாண சபைக் கதவுகளை மூடியதும் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்காமை என்பனவும் அரசின் ஜனநாயகத்தை மதிக்காத நிலைமையை மேலும் எடுத்துக்காட்டுகின்றது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-8)

## சைக்கிள்கள் திருட்டு

சாவகச்சேரி நகரப்பகுதியில் ஒரு வாரத்தில் இரு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. கடந்த 19 ஆம் திகதி நகரசபை ஊழியர் ஒருவரது சைக்கிள் அலுவலகத்தில் நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து திருடப்பட்டது.

மற்றும் கல்வயலைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை கேசவலிங்கம் என்பவருக்குச் சொந்தமான சைக்கிள் சாவகசசேரி நவீன சந்தைக் கட்டடத்தில் இயங்கும்புடைவைக் கடைக்கு முன்பாக பூட்டிவைத்திருந்த நிலையில் திருடப்பட்டுள்ளது.

இவ்விரு திருட்டுச் சம்பவங்கள் குறித்தும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ரு-7,21)

## ஆனையிறவு வெற்றிவிழா வெகுசிறப்பாக நடைபெற்றது

(கிளிநொச்சி)

ஆனையிறவுப் படைத்தளம் விடுதலைப புலிகளால் தாக்கியழிககப்பட்டதன் 5ஆம் ஆண்டு வெற்றி வழாவின் இறுதிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் ஆனையிறவில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் முதனமைச் சுடரினை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் யாழினி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றிவைததார். விழா மண்டபத்தில் மாவீரர்களை நினைவுகூரும் படத்திற்கான ஈகச் சுடரினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார்.

மாவீரர்களை நினைவு கூரும் படத்திற்கான மலர் மாலையினை மேற்குமுனை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத்தளபதி லெப். கேணல் நகுலன், குட்டிசிறி மோட்டார் படையணியின் சிறப்புத்தளபதி கோபால் ஆகியோர் அணிவித்தனர்.

அரங்க நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி தலைமையில் நடைபெற்றன. கருத்துரைகளை கிளிநொசசி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை, போர்ப் பயிற்சி கல்லூரியைச் சேர்ந்த செஞ்சினா, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார். இவ் விழாவில் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும கலந்து கொண்டதுடன் ஆனையிறவு தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்டெடுக்கப்பட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் குளிர்பானங்கள், இனிப்புக்கள் ஆகியவற்றை பரிமாறிக் கொண்டனர். (ச-4)

## இன்று ஒரு தகவல்

# தகவல் ஜோசியம்

இதுவரை காலமும் உங்களுக்குத் தகவல் சொல்லிக் கொண்டிருந்த நான் இன்று ஜோசியம் சொல்லப்போகிறேன். நாடி ஜோசியம், ரேகை ஜோசியம் என்பதுபோல் இது "தகவல் ஜோசியம்" என்று வைத்துக்கொள்ளுங்கள். கவனமாகக் கேளுங்கள். நான் சொல்வதெல்லாம் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்று நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள். பலன் சரியாக இருந்தால் பதில் கடிதம் எழுதிப் போடுங்கள்.

என்ன தயாரா? இதோ ஆரம்பிக்கிறேன். நீங்கள் எப்படிப் பட்டவரென்றால் அடுத்தவர்கள் உங்களை விரும்ப வேண்டும், பாராட்டவேண்டும் என்ற தேவை உங்களிடம் அதிகமாக இருக்கிறது. நீங்கள் உங்களிடம் உள்ள நல்ல, கெட்ட விடயங்களை அடிக்கடி பார்ப்பீர்கள். அப்படி சுயமாக விமர்சனம் செய்யும் தன்மை உங்களுக்கு உண்டு.

உங்களிடம் உள்ள திறமைகளில் பலவற்றை நீங்கள் பயன்படுத்தி நன்மையடையாமல் வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்! என்ன சரிதானா? உங்களுடைய ஆளுமையில் பல குறைகள் இருந்தாலும் கூட பொதுவாக நீங்கள் அவற்றை வேறுவகையில் ஈடுசெய்து விடுகிறீர்கள். வெளித்தோற்றத்துக்கு நீங்கள் ஒழுங்கு, கட்டுப்பாடு உள்ளவராகத் தெரிகிறீர்கள். இருந்தாலும் உள்மனம் அப்படியில்லை. பத்திரமில்லை என்ற உணர்ச்சி உள்ளது. சஞ்சலம் உள்ளது. அடிக்கடி உங்களுடைய முடிவுகளும், செயல்களும் சரியானவைதானா என்ற சந்தேகம் உங்களுக்கு தீவிரமாக ஏற்படுவதுண்டு.

நீங்கள் ஓரளவுக்கு மாற்றமும் புதுமையும் ஏற்படவேண்டுமென்று ஆசைப்படுகிறீர்கள். கட்டுப்பாடுகளும், தட்டுப்பாடுகளும் உங்களை அடக்கி வைக்கும்போது உங்களுக்கு அதிருப்தி உண்டாகிறது. "நாம் சுயேச்சையாக சிந்திக்கக்கூடியவர் என்ற நினைப்பு உங்களுக்கு உண்டு. மற்றவர்கள் கூறுவதை சரியான ஆதாரமில்லாமல் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள்.

மற்றவர்களிடம் நம்மைப்பற்றி அளவுக்குமீறி வெளிப்படையாகப் பேசுவது புத்திசாலித்தனமில்லை என்பதை நீங்கள் புரிந்து வைத்திருக்கிறீர்கள். நடைமுறை சாத்தியமற்ற சில ஆசைகள் உங்களிடம் உண்டு. சுயபாதுகாப்பு என்பது உங்களுடைய முக்கியமான இலட்சியங்களில் ஒன்று. சில சமயம் நீங்கள் மற்றவர்கள் உங்களிடம் வந்து சகஜமாகப் பழகக்கூடிய அளவுக்கு நடந்துகொள்வீர்கள். சிலசமயம் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பீர்கள். தயங்குவீர்கள், ஒதுங்கிப் போய்விடுவீர்கள்.

எனன இதுவரைக்கும் நான் சொல்லிக் கொண்டுவந்த ஜோசியம் எப்படி உங்களுக்கு ஒத்துவருகிறதா? அப்படி ஒத்துவந்ததென்றால் உடனே என்னைப் பாராட்ட ஆரம்பித்துவிடாதீர்கள. நீங்கள் பாராட்ட வேண்டியது **Ross Stagner** ஐ. அவர் ஒரு மனோதததுவ நிபுணர். அவர் அமெரிக்காவில் ஒரு உளவியல சோதனை நடத்தினார். அந்த அடிப்படையில்தான் இப்போது நான் உங்களுககுப் பலன் சொன்னேன். எனக்கு ஜோசியமும் தெரியாது ஒன்றும் தெரியாது.

பொதுவாக மனிதர்கள் பாராட்டுக்களை விரும்புவார்கள். விமர்சனங்களை வெறுப்பார்கள். இதை மனதில் வைத்துக் கொணடு பலன் சொல்லவேண்டும் அவ்வளவுதான். நாம் சொல்வதில் பெருமளவு சாதகமானதாகவும், லேசாக விமர்சிப்பது போலவும் இருக்கவேண்டும். மக்கள் நம்பிவிடுவார்கள். ஒருவரை கருமி என்று சொல்வதைவிட சிக்கனமானவர் என்று சொனனால் அவர் ஏற்றுக்கொள்வார். அவர் ஊதாரியாக இருந்தால் பெரிய செலவாளிதான் இருந்தாலும் நல்ல விடயங்களுக்குத் தான் செலவழிப்பீர்கள் என்று கூறவேண்டும்.

சொல்லும் பலன்கள் யாவும் பொதுப்படையானதுதான். இருநதாலும் அவை தனக்கு உரியவையாக கண்டுபிடிக்கப்பட்டவை என்ற பிரமையை கேட்பவர்களுக்கு உருவாக்கவேண்டும். அதுதான் ஜோசியரின் சாமர்த்தியம். இந்தப் பிரமைக்கு உளவியலாளர் "பார்னம் உத்தி" என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

பீனியஸ் பார்னம் என்ற ஒருவர் 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் மிகப் பிரபலமாக இருந்த ஒரு சர்க்கஸ் கம்பனியின் அதிபர். "உலகத்தில் ஒவ்வொரு நிமிடமும் ஓர் ஏமாளி பிறந்து கொண்டே இருக்கிறான்" என்பது அவருடைய சித்தாந்தம். ஒவ்வொருவரையும் திருப்தி செய்யும் அம்சங்களை கொஞ்சமாகக் கலந்து கேளிக்கை நிகழ்ச்சிகளை நடததியதுதான் அவருடைய மகத்தான வெற்றிக்குக் காரணமாம். அந்த உத்தியை அடிப்படையாக வைத்துத்தான் இன்று பலா இந்த உலகத்தில் ஒவ்வொரு கூட்டத்தைக் கூட்டி பிழைப்பு நடத்துகிறார்கள்.

அப்படி பிழைப்பு நடத்திக்கொண்டிருந்த ஒரு சாமியாருக்கு ஏகப்பட்ட தொண்டர்கள் இருந்தனர். பலர் அவரிடம் வந்து அருள்வாக்கு கேட்பார்கள். அவரும் சொல்வார்.

ஒருநாள் அவர்முன் ஒரு பெண்மணி மிகவும் கவலையோடு வந்து நின்றார். இவர் அவரைப் பார்த்தவுடனே "அம்மா...கவலைப்படாதே... சொல்லிக்கொள்ளாமல் புறப்பட்டுப்போன உன் கணவன் வந்துசேருவான் தைரியமாக இரு" என்று ஆசீர்வாதம் செய்தார்.

அந்தப் பெண்மணி போனவுடன் அவரது சீடன் அவரிடம் வந்து "அது எப்படி சுவாமி... அந்த அம்மாவின் வீட்டுக்காரன் சொல்லாமல் புறப்பட்டுப் போன விடயத்தை அவ்வளவு சரியாகக் கண்டுபிடித்தீர்கள்?" என்று கேட்டான். "அவளது தொந்தரவு தாங்கமுடியாமல் தலைமறைவாகிவிட்ட அந்த அப்பாவி நான் தான்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# வடக்கு - கிழக்கை மீளக்கட்டியெழுப்ப பொதுக்கட்டமைப்பு இன்றியமையாதது

## -யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ்

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெருமளவு பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பகுதிகளைப் புனரமைத்து மீளக்கட்டியெழுப்புவதற்குப் பொதுக்கட்டமைப்பு உருவாககப்படுவது அவசியம் என யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.


கொழும்பு சௌசிறிபாயவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

கடந்த 20 வருடகால அனுபவங்கள் ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில அவர்களுடன் இணைந்து பணியாற்ற முடியும் என்ற நம்பிக்கை தனக்கு ஏற்பட்டுள்ளது.

நாங்கள் இணைந்து செயற்படுவதற்குப பழகியுள்ளோம். விடுதலைப் புலிகளின் பகுதிகளில் செயற்படுவது சாத்தியமான விடயம். உலக வங்கியும் ஏனைய சர்வதேச அமைப்புக்களும் அங்கு செயற்படுகின்றன. நாங்கள் தொடர்ந்து அவ்வாறே செயற்படுவோம். யாழ். மாவட்டத்திலே பருத்தித்துறை செயலகப் பிரிவும மருதங்கேணி செயலகப் பிரிவும் சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்டன.

இநத இரு செயலகப் பிரிவிலும் 32 கிராமசேவகர் பிரிவுகளும, 71 கிராமங்களும் பாதிக்கப்பட்டன. இறப்புகள-1260, காயமடைந்தவர்கள்-1647, மதிப்பீடு செய்யபபடடுள்ள காணாமல் போனவர்களும், இறந்தவர்களும் 1240 ஆகவுள்ளது. அதில் இற்றைவரை 66 போ பிரதேச செயலகங்களில் பதியப்பட்டுள்ளார்கள். மற்றும் இந்த அனர்தத்தினால் 103 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அநாதைப்பிள்ளைகளாக்கப்பட்டுள்ளனா. விதவைகளாக 38பேர் பதியப்பட்டுள்ளார்கள் என்றார்.



மேலும், பாதிக்கப்பட்ட வீடுகளின எண்ணிக்கையினை அவர் குறிப்பிடுகையில், 100 மீற்றருக்குள்ளே மருதங்கேணியில் 927 வீடுகளும், பருத்தித்துறையில் 2052 வீடுகளுமென மொத்தம் 2979 வீடுகளும் 100 மீற்றர் தொடக்கம் 200 மீற்றர்வரை மருதங்கேணியில் 1847 வீடுகளும் பருத்தித்துறையில் 582 வீடுகளுமாக மொத்தம் 2429 வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

மொததமாக மருதங்கேணியில் 2774 வீடுகளும், பருத்தித்துறை செயலகப் பிரிவில் 2634 வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக யாழ்.மாவட்டத்தில் 5408 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதில் 3708 வீடுகள் முற்றுமுழுதாகவும், 1700 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# எச்.என்.டி.ஏ-2004 இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விபரம்

(கல்வியங்காடு)

யாழ் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த ஆண்டு நடாததப்பட்ட எச்.என்.டி.ஏ கற்கை நெறிக்கான ஆண்டிறுதிப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களின் பெயா விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப் பரீட்சைகள் தமிழ்மொழி மூலமும் ஆங்கிலமொழி மூலமும் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சித்தியடைந்தோரின் பெயர் விபரம் வருமாறு:-

**தமிழ்மொழி மூலம்**

எஸ்.அபிமினி, ரி.அகிலன், கே. ஆதித்தன், பி.பாலச்சந்திரன், வை.டனுசாந்தினி, ஆர்.கோபிகா, எஸ்.ஜனித்தா, ஆர்.ஜீவகலா, ஆர்.ஜெயக்குமார், எஸ். கஜமுகன், கே.கலைமகள், ரி. கிருஸ்ணகுமாரி, ரி.ருபேந்திரன், எஸ்.மயூரன், ரி. மரினா, என். நிலனன், பி. பமீலா, ஐ.பிரபாதாஸ், எஸ்.பிரதீபன், ஆர்.பூரணச்சந்திரன், ரி.பிரியதர்சினி, என்.ரமணன், ஆர்.சசிகுமார், பீ.சசிதரன், ரி. சுஜாதா, எஸ். சுதாசன, எஸ் சிவரூபன், எஸ். சிவசெந்தூரன், என். சுஜீவரூபன, ஆர். சிவகுமார், எஸ்.ஸ்ரீரஞ்ஜினி, எஸ்.தவச்செல்வி, பீ.துஷிதரன், பீ.தாரணி, எஸ். உஷாநந்தினி, ஆர்.வித்தியானந்தன், என்.வித்தியா, வி.வனிதா,

**ஆங்கிலமொழி மூலம்**

வி.அருந்தவகுமார், எம். ஜோர்ஜ் கென்னடி, ஆர். இந்துமதி, வை.ஜான்சி சுதாமதி, வி.ஜெயதீசன், ரி.கானமபன், ஏ.கார்த்திகாயினி, கே.கௌசிகா, எஸ்.கிருஸ்ணவேணி, எஸ்.மாதுளா, என்.நாமகள, எஸ்.பாலமுரளி, என்.பிரகாஷ், எம்.பிரதீபா, எஸ்.ரஜினி, கே.ரவிக்குமார், கே.ரவிசங்கர், வி.சாருமதி, எ.வை.செலவகுமார், சி.செல்வறதன், என்.செல்வேந்திரா, எஸ்.சோபனா, ஈ.சிவாஜினி, கே.சிவகரன், எஸ்.சிவ:கவிதா, எஸ்.சிறிபிரகாஷ், எஸ்.ஸ்ரீதர், ஏ.சுபாஜினி, ஆர். சுகந்தரூபி, ரீ.சுகுணவதி, எஸ்.தனுஷா, பீ.தரிணி, கே.தர்மிளா, ஆர்.தயாபரன், வீ.தயாபரன், கே.திலகேஸ்வரி, கே.துளசி, பீ.வரதராஜன், கே.விக்னேஸ்வரன், என்.வசீகரன, ஜி.அனுராகரன்.

(ற-7,74)

# உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஆலயங்களில் பூசை நடத்த அனுமதி

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ-உயர் பாதுகாப்பு வலயத்துள் உள்ள நித்தர்புலம் செல்வமுத்துமாரி அம்மன் ஆலயம், நித்தர்புலம் பெரியதம்பிரான் ஆலயம் மற்றும் வள்ளக்குளம் வீரகத்திப்பிள்ளையார் ஆலயம் ஆகிய மூன்று ஆலயங்களிலும் பூசை வழிபாடுகளை நடத்த படைத்தரபபினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடநத வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஏற்பாட்டின் பேரில் பலாலி படைத் தலைமை அலுவலகத்தில மேஜர் ஜெனரல் எஸ்.டி தென்னக்கோனை செ.ஆனந்தரஞ்சன் சந்தித்து, இடம்பெயர்ந்து வாழும் மக்கள் படும் அவலங்களை எடுத்துக்கூறியதுடன், பல ஆலயங்கள் பூசை இல்லாமல் இருப்பதை சுட்டிக்காட்டியதற்கு அமைய, சில நடவடிக்கை எடுப்பதாக தென்னக்கோனால் உறுதி வழங்கப்பட்டது.

அத்துடன், பலாலி படைத்தளபதி 521 அல்லாரை கட்டளைத்தளபதி, தனங்கிளப்பு, கோவிலாககண்டி கட்டளைத்தளபதிகள் செ.ஆனந்தரஞ்சன் உயர் பாதுகாப்பு வலயத்துள் உள்ள ஆலயங்களைப் பார்வையிட அழைத்துச் சென்றதுடன், மறவன்புலோ மத்தி மக்களின் தொழில்சார் இடங்களையும் பார்வையிட்டு, உடனடியாக மேற்படி மூன்று ஆலயங்களிலும் துப்புரவுப்பணிகளை மேற்கொண்டு பூசைகளை ஆரம்பிக்க அனுமதிப்பதாகவும் உறுதியளித்தார்கள்.

மேற்குறிப்பிட்ட இடங்களில் உள்ள இதர ஆலயங்களின் பூசை வழிபாட்டுக்கும் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் பூரணமாக மிதிவெடி அகற்றப்பட்டு மறவனபுலோ மத்தியில் மக்கள் மீள்குடியமர்வுக்கு ஒழுங்கு செய்வதாகவும் உறுதி கூறப்பட்டது.

மேலும் ஆலயம் துப்புரவு செய்தல் மற்றும் பூசைகள் தொடங்குவது உட்பட வேறு சில விடயங்களை ஆராயும் நோக்கில் எதிர்வரும் 6 ஆம் திகதி அல்லது 7ஆம் திகதியளவில் கோவிலாககண்டியில் நாடாளுமனற உறுப்பினர் க.சுரேஸ்பிரேமச்சந்திரன் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாகவும தெரிவிக்கப்படுகின்றது.

(க)

# உள்ளூர் துணி உற்பத்தியை ஊக்குவிக்க விசேட திட்டம்

(கொழும்பு)

உளளூரில் தயாரிக்கப்பட்ட துணிவகைகளை அரச நிறுவனங்களுக்கு வழங்கும் திட்டமொன்றை புடவை தொழில் பயிற்சி மற்றும் சேவைகள் நிலையம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதற்கமைய ஆயுதப்படையினர் மற்றும் பொலிஸார் தங்களது சீருடைகளுக்கும் ஏனைய தேவைகளுக்கும உள்ளூர் துணிவகைகளை உபயோகிப்பது அவசியமாககப்படவுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளுக்கும் உளளூர் துணிவகைகள் வழங்கப்படவிருக்கின்றன.

வருடமொன்றிற்கு ஒருகோடி 30 இலட்சம் ரூபா பெறுமதியான துணிவகைகள் மாணவர்களின் சீருடைககெனத் தேவைப்படுகின்றது. உள்ளூர் துணி உறபத்தியாளர்களுக்கு ஊக்கமளிக்கவும் உளளூர் உற்பத்தியை அதிகரிக்கவுமென அரசாங்கம் 180 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

## இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

### (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 53



*ஆலோசனைக் குழுக்கள்*

104. (தெரிவுக்குழுவானது. பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒவ்வொன்றினதும் தொடக்கத்திலும் காலத்திற்குக் காலம் அவசியம் ஏற்படும் பொழுது அமைச்சரவையின் அமைச்சுக்களது எண்ணிக்கைகளுக்குச் சமமான எண்ணிக்கையில் ஆலோசனைக் குழுக்களை நியமித்தல் வேண்டும்.)

105. குழுவுக்குப் பரிசீலனை செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கும் கருமங்களுக்கும் பொறுப்பான அமைச்சரே ஆலோசனைக் குழுவொன்றின் தவிசாளராக இருத்தல் வேண்டும்.

எனினும். ஜனாதிபதியின் பொறுப்பிலுள்ள அமைச்சுக்கள் விடயத்தில் அவ்வமைச்சுக்களின் பிரதி அமைச்சர்கள் ஆலோசனைக் குழுக்கள் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

106. (ஒவ்வோர் ஆலோசனைக்குழுவும் தெரிவுக்குழுவால் நியமிக்கப்பட்டிருக்கும் ஐந்து உறுப்பினர்களுக்கும் குறையாததும் (பன்னிரண்டு உறுப்பினர்களுக்கு) மேற்படாததுமான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.)

106. அ) தெரிவுக்குழு காலத்துக்குக் காலம். ஆலோசனைக் குழு உறுப்பினரொருவர் மரணமடையும் அல்லது பதவி துறக்கும் அல்லது உறுப்பாண்மையை வறிதாக்கும் விடயத்தில். ஆலோசனைக் குழுவின் அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு இன்னோர் உறுப்பினரை நியமிக்கலாம். எனினும். தெரிவுக்குழுவானது தேவையெனக் கருதுமிடத்து ஏதேனும் ஆலோசனைக் குழுவின் வேறெவரேனும் உறுப்பினரை விடுவித்து அவரது இடத்திற்கு வேறு உறுப்பினரை நியமிக்கும் உரிமையை குழு தன்னகத்தே கொண்டிருக்கும். இக்கட்டளையின் கீழ் செயற்படும் ஒவ்வொரு நியமனமும் பாராளுமன்றத்தின் அடுத்துவரும் கூட்டத்தில் அதற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.)

106. ஆ) தனது கையொப்பமுடனான விண்ணப்பத்தின் மூலம் ஆலோசனைக்குழுவின் முன்கூட்டிய அனுமதியைப் பெறாமல் ஆலோசனைக்குழுவின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தவறும் எவரேனும் உறுப்பினர். அத்தகைய ஆலோசனைக் குழுவிலுள்ள அவரது உறுப்பாண்மையை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் தெரிவுக் குழுவினால் இணக்கங் காணப்பட்டாலன்றி. அதே கூட்டத்தொடரின் போது அக்குழுவிற்கு மீண்டும் தெரிவு செய்யப்படவும் ஆகாது.

எனினும். அவ்வுறுப்பினர் முன்கூட்டியே பெறப்பட்ட பாராளுமன்ற அனுமதியுடன் பாராளுமன்றத்தின் அமர்வுகளுக்குச் சமுகமளிக்காதிருக்கும் காலப்பகுதிக்குள் ஒரு தினத்தில் அத்தகைய குழுவின் ஏதேனும் கூட்டம் நடைபெற்றால். முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.)

107. ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் இயன்றவரை பாராளுமன்றத்திலுள்ள சகல கட்சிகளையும் பிரதிபலிக்கும் வகையில் அமைதல் வேண்டும். ஆலோசனைக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும்போது தெரிவுக்குழுவானது உறுப்பினர்களின் விருப்பங்களை அறிய வேண்டுமென்பதோடு இயன்றவரையில் அவர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப இடமளிக்கவும் வேண்டும்.

108. தெரிவுக் குழு மாறாகத் தீர்மானித்தாலொழிய எந்தவோர் உறுப்பினரும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆலோசனைக் குழுக்களில் கருமமாற்றக்கூடாது.

108. அ) பாராளுமன்ற உறுப்பினர் எவரும் தாம் அங்கம் வகிக்காத ஆலோசனைக் குழுவொன்றின் கூட்டத்திற்கு அக்குழுத் தவிசாளரின் வேண்டுகோளின் மீது சமுகமளிக்கலாம் என்பதுடன். குழுத் தவிசாளரின் வேண்டுகோளுக்கமைய வெளியேறவும் வேண்டும்.)

109. ஆலோசனைக் குழுவொன்றின் கடமை. சட்டமூலம் சட்டவாக்கத்துக்கான பிரேரணைகள். குறை நிரப்பல் அல்லது பிறமதிப்பீடுகள். செலவீனக் கூற்றுகள். பிரேரணைகள். ஆண்டறிக்கைகள் அல்லது பத்திரங்கள் உட்பட தவிசாளரினால் அல்லது பாராளுமன்றத்தினால் ஆற்றுப்படுத்தப்படும் விடயங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கையிடுதலாகும்.)

110. ஓர் ஆலோசனைக்குழு அதன் தவிசாளர் மூலம் எந்தவொரு சட்டமூலத்தையோ பிரேரணையோ சமர்ப்பிக்க அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

111. ஒவ்வோர் ஆலோசனைக்குழுவும் தவிசாளர் அழைக்கும்பொழுது கூடவேண்டும். குறைந்தபட்சம் மாதம் ஒரு முறையேனும் தவிசாளரினால் குழு கூட்டப்பட்டு. பயனுள்ள வேலை நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்படுவதைத் தவிசாளருடனும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துடனும் கலந்தாலோசித்து ஒவ்வோர் அமைச்சுச் செயலாளரதும் கடமையாகும்.

எனினும். அத்தகைய ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களில் குறைந்தபட்சம் மூவர் எழுத்துமூலம் வேண்டுமிடத்து. இயன்றளவு விரைவில் குழுக்கூட்டமொன்று கூட்டப்படுதல் வேண்டும்.

112. செயலாளர் நாயகமோ அல்லது அவரால் நியமிக்கப்படும் பாராளுமன்றத்தின் எந்தவோர் உத்தியோகத்தரோ அத்தகைய குழு ஒவ்வொன்றினதும் செயலாளராக இருத்தல் வேண்டும். அவரின் கடமைகளையும் கருமங்களையும் கொண்டு நடத்துவதற்குத் தேவையான ஏனைய பணியாளர்கள். வசதிகள். தேவைகள் ஆகியன அவருக்கு அளிக்கப்படல் வேண்டும்.

113. ஆலோசனைக் குழுவுக்குப் பாராளுமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் மீதான ஆலோசனைக் குழுவின் அறிக்கை ஆற்றுப்படுத்தப்பட்ட மூன்று மாதங்களுக்குள் அதன் தவிசாளரால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவசியமெனக் கருதுமிடத்து குறிப்பிட்ட ஏதாவது விடயம் மேலும் பரிசீலனை செய்யப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் எடுத்தியம்பலாம். குழு உறுப்பினர் எவரதும் தனிப்பட்ட அபிப்பிராயம் அறிக்கையில் சேர்க்கப்படலாம்.

எனினும். ஆலோசனைக் குழுவொன்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் அவ்விடயங்கள் மீதான ஆலோசனைக் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் வரை பாராளுமன்றத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.

114. ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் ஆட்களையும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் வரவழைத்துப் பரிசீலிப்பதற்கும் இடத்துக்கிடம் மாறுவதற்கு அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் பற்றி பூ,ரண பரிசீலனைக்கு அவசியமான சகல கருமங்களையும் செய்வதற்கும் பாராளுமன்றத்தின் எந்தவோர் ஒத்திவைப்பினாலும் தடைப்படாமல் கூடுவதற்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

115. (ஆலோசனைக் குழுவொன்றின் கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் தேவையான கூட்ட நடப்பெண் இல்லாமல் அத்தகைய ஆலோசனைக் குழு பணியாற்றாது பார்த்துக்கொள்வது அதன் தவிசாளரின் கடமையாதலும் வேண்டும்.)

*உப குழுக்கள்*

115. அ) (1) ஒவ்வொரு ஆலோசனைக் குழுவும். அது அவசியமெனக் கருதும்போது. எவையேனும் கருமங்கள பற்றி. அத்தகைய ஆலோசனைக் குழுவால் பணிக்கப்படுகின்றவாறு. விசாரணை செய்து அத்தகைய ஆலோசனைக் குழு குறித்துரைக்கும் ஒரு காலப்பகுதிக்குள் அறிக்கையிடுவதற்கென அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமிக்கலாம். அத்தகைய ஆலோசனைக் குழு அவசியமெனக் கருதும் போது. ஏதேனும் அத்தகைய உபகுழு தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கென அதன் முன்னர் எவரேனும் ஆளை ஆணையிட்டழைத்து விசாரணை செய்வதற்கும். ஏதேனும் பத்திரத்தை. பதிவேட்டை அல்லது ஆவணத்தைக் கோருவதற்கும் பரிசோதிப்பதற்கும். அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்களை முழுமையாகப் பரிசீலிப்பதற்கென இடத்துக்கிடம் செல்வதற்கும். பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருப்பினும் அவ் உபகுழு கூடுவதறகும். அதற்கு அதிகாரம் வழங்கலாம்.

(2) ஒவ்வொரு உபகுழுவும். ஆலோசனைக் குழுவினால் நியமிக்கப்படும் ஒரு தவிசாளரையும் இரண்டு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உப குழுவின் கூட்ட நடப்பெண் தவிசாளர் உட்பட இரண்டு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## திறப்புவிழா

(ஊர்காவற்றுறை)

பல இலட்சம் ரூபா செலவில் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகாமையில் கட்டப்பட்டுள்ள அரசாங்க ஊழியர்கள் தங்கும் விடுதி கடந்த 27ஆம திகதி புதன்கிழமை காலை உதவி அரசாங்க அதிபர் க.சிறீமோகனனால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

(ற)

## பொதுக்கூட்டம்

(பொன்னாலை)

அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத்தலைவர் சு.கணேசமூர்த்தி தலைமையில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

(க-49)

## பாதுகாவலர் திருவிழா

(ஊர்காவற்றுறை)

உலகத் தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித சூசையப்பரின் திருவிழா ஊர்காவற்றுறை நடுத்தெரு புனித சூசையப்பர் ஆலயத்தில் கடந்த 22ஆம திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு பங்குத்தந்தை அருட்திரு அன்ரனி ஞானப்பிரகாசம் அடிகள் தலைமையில் கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொருப பவனியும் இடம்பெற்று திருவிழா நிறைவுபெறும்.

(ற)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயத்தில் கடமை பார்க்கும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு யாழ். மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த உடற்கல்விப் பாடத்தில் ஆகக்குறைந்தது ஆசிரியர் பயிற்சியைப் பெற்ற இ.ஆ.சே. 1, 2-1 ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மே மாதம் 15ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ற-47)

## சங்கிலி அறுப்பு

(பொன்னாலை)

தொல்புரம் டச்சுவீதிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துசென்ற பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை அவ்வீதிப் பகுதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற திருடர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

மூளாய் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியே இவ்வாறு திருடர்களால் அறுத்துச் செல்லப்பட்டது.

(க-49)

## மேதினப் பேரணிக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேதின ஊர்திப் பவனியிலும், பொதுக்கூடடத்திலும் யாழ்.மாவட்டத்தில் உள்ள சிகை ஒப்பனையாளர் சங்கங்களை கலந்துகொள்ளுமாறு ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (ற)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடல் இந்தன் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றையதினம் காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

(க-2)

## புதிய கட்டடம்

(பொன்னாலை)

"நிக்கொட்" நிதியுதவியுடன் வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

பாடசாலையில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைப் போக்கும் நோக்குடனே இந்தப் புதிய கட்டடத்தை நிக்கொட் நிறுவனம் அமைத்துக் கொடுக்க முன்வந்திருக்கின்றது.

(க-49)

## விழிப்புணர்வு பிரசாரம்

(பொன்னாலை)

வரணிப் பிரதேசத்தில் மிதிவெடிகளால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்த விழிப்புணர்வுப் பிரசாரத்தை வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனத்தினர் அண்மையில் மேற்கொண்டனர்.

மேற்படி நிறுவனத்தின் தொண்டர்கள், இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கும் மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களிடையே மிதிவெடி அபாயம் குறித்த பிரசாரங்களை மேற்கொண்டனர்.

(க-49)

## ரயில் கடவைக்கு மேலாக மேம்பாலம்

(கொழும்புத்துறை)

ரயில் கடவைக்கு மேலாக மேம்பாலங்களை அமைக்கும் ஆலோசனையொன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பொல்காவலையில் இடம்பெற்ற ரயில் வி[illegible]தின்போது மேம்பாலங்களை அ[illegible] வேண்டிய தேவை உணரப்[illegible]தாக பிரதமர் சுட்டிக்கா[illegible].

மேம்பாலங்களை [illegible]பதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைக[illegible] நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்ட பிரதமர், இது தொடர்பான ஆலோசனைகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-9)

## அருள் ஒளி வெளிவந்தது

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தினால் மாதாந்தம் வெளியிடப்படும் "அருள் ஒளி" சித்திரை மாத இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது.

(ற)

## பரிசளிப்பு விழா

(கோப்பாய்)

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதல்வர் க.கனகராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன், வலி-கிழக்குப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ஆ.கதிரமலை நாதன் ஆகியோரும் கலந்து சிறப் பிக்கவுள்ளனர்.

(ற-7,79)

# உலகறிந்த ஊடகவியலாளன் உறங்கிவிட்டான்



உலகறிந்த தமிழ் பத்திரிகையாளர் சிவராம் இனந்தெரியாதவர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் ஊடகவியலாளர்கள் நிமலராஜன், நடேசன்... வரிசையில் தற்போது சிவராம் படுகொலைசெய்யப்பட்டுள்ளார்.

த ஐலண்ட் மற்றும் சண்டே ரைம்ஸ் ஆகிய ஆங்கில வார இதழ்களில் 'தராக்கி' என்ற புனை பெயரில் இராணுவ ஆய்வுகள் மற்றும் அரசியல் கட்டுரைகளை எழுத ஆரம்பித்தார்.

இவரது எழுத்துக்கள் மக்கள் மத்தியில் ஜனரஞ்சக அந்தஸ்தை பெற்றதுடன், இவரது எதிர்வுகூறல்கள் அரசியல் அரங்கையே கலக்கி அடித்திருக்கின்றன.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் இவர் எழுதிய கட்டுரைகள் மக்கள் மத்தியில் பாரிய வரவேற்பை பெற்றன. முன்னர் வெளிவந்த மட்டக்களப்பு தினக்கதிர், வீரகேசரி போன்ற தமிழ்ப் பத்திரிகைகளிலும் கட்டுரைகளை எழுதி மக்கள் மத்தியில் இடம்பிடித்திருந்தார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் சம புலமையுடைய இவர், ஆங்கில ஊடகங்களின் மூலம் சிங்கள மக்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்தினார். இவைமட்டுமல்லாமல, வெளிநாடுகளிலும் சென்று தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து சர்வதேச மாநாடுகள் மற்றும் கூட்டங்களில் பேசினார்.

புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களுக்கு தமிழ் மக்களின் பிரச்சினையின் தற்போதைய நிலை குறித்து கூறிவந்தார்.

கருணாவின் பிரச்சினைக்குப் பின்னர் இவர் வீரகேசரி வார இதழில் எழுதிய 'கருணாவுக்கு ஒரு கடிதம்' என்ற கட்டுரை மக்கள் மத்தியில் பாரிய வரவேற்பைப் பெற்றிருந்தது.

இதனை வாசிக்கவென பத்திரிகையை மக்கள் முண்டியடித்து வாங்கி, பத்திரிகைகள் தீர்ந்துபோனதால் அக்கட்டுரையை போட்டோ பிரதி எடுத்து ஆயிரக்கணக்கில் மக்கள் வாசித்தமை இவரது எழுத்தின் வலிமைக்கு ஒரு சான்று.

கட்டுரைகளில் மட்டுமன்றி செய்திகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்வதிலும் திறன்மிக்கவராக விளங்கினார்.

தமிழ்நெற் ஆங்கில இணையத் தளத்தில் உடனுக்குடன் சம்பவங்கள் குறித்த செய்திகளை வழங்குவதில் பெரும்பங்கு வகித்தார்.

கடந்த ஜூலை மாதம் கொழும்பின் புற நகர்ப்பகுதியான கொட்டாவையில் கருணா குழுவைச் சேர்ந்த எண்மர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை தமிழ்நெற் இணையத்தளத்தில் பார்த்த பின்னர்தான் பொலிஸே சம்பவ இடத்துக்குச் சென்றது.

இச்சம்பவம் எவ்வாறு தமிழ்நெற்றுக்குத் தெரியவந்தது என்று தமிழ்நெற் ஆசிரியர் சிவராமை விசாரணை செய்யவேண்டும் என்று சில இனவாத அமைப்புகள் முழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. பி.பி.சி தமிழ்ச்சேவைக்கும் இவர் அவ்வபோது செய்திகள் வழங்கிவந்துள்ளார்.

கடந்த வருடம் பத்திரிகையாளர் நடேசன் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் இவரது உயிருக்கும் ஆபத்து என்ற கருத்து பரவலாக நிலவியது. அப்போது சுவிஸில் இருந்த இவர் இந்த அச்சுறுத்தல்களால் சிறிதும் அஞ்சாது தாயகம் திரும்பி ஊடகப்பணியைத் தொடர்ந்தார்.

'ஒரு நடேசனையோ அல்லது சிவராமையோ கொலை செய்வதால் கொலையாளிகள் தமது இலக்கை அடைந்துவிடமுடியாது' என்று அடிக்கடி தனது கட்டுரைகளிலும் செவ்விகளிலும் இவர் கூறி வந்தார்.

கடந்த மே மாதம் இவரது வீடு சோதனையிட சுமார் 40 பொலிஸார் சென்றனர். ஆனால் இவருடன் வாக்குவாதப்பட்ட பின்னர் திரும்பி விட்டனர். இலங்கை அரசியல் எல்லைகளை தாண்டிய பத்திரிகையாளர்கள் ஆணைக்குழு என்ற சர்வதேச அமைப்பு கடுமையாக கண்டித்திருந்தது.

கடந்த புதன் கிழமையும் இவரது கட்டுரை டெய்லி மிரர் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. இரண்டுநாள் கழித்து அவரது மரணச் செய்தி பிரசுரமாகியுள்ளது. தர்மரட்ணம் சிவராம் என்ற இயற்பெயருடைய இவருக்கு இறக்கும் போது வயது 47.

## மேதின ஊர்வலமும் பொதுக் கூட்டமும்

(நீர்வேலி)

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலையின் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பொது அமைப்பு மே தினத்தில் ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் நடாத்தவுள்ளது.

நாளை காலை 11மணிக்கு ஊர்வலத்தைத் தொடர்ந்து தொழிற்சாலை முன்றலில் மே தினக் கூட்டம் நடைபெறவுள்ளதால் தொழிற்சாலை ஊழியர்களையும் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் உட்பட அனைத்து பொதுமக்களையும் இவ்வூர்வலத்திலும் கூட்டத்திலும் பங்குபற்றுமாறு இத்தொழிற்சாலையின் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பொது அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ந-7)


## சிறு விளம்பரம்

இருதயநோய், நீரிழிவு, நரம்புத்தளர்ச்சி, வெண்புள்ளி, சிறுநீரக நோய், சிறுநீரகக் கல், ஆண், பெண் பாலியல் குறைபாடுகள், குழந்தைநோய், சொராசிஸ் போன்ற தோல் நோய்கள், தலைமயிர் வளர்வதற்கு, நரை மாற எண்ணெய், சித்த மருந்துகள் சகலவிதமான எண்ணெய் வகைகளும் பெற்றுக் கொள்ளலாம். முறிவு நோ என்பவற்றிற்கும் மருந்துகள் எடுக்கலாம்.

சித்தா வைத்திய ஆராய்ச்சி நிலையம்,
காங்கேசன்துறை வீதி,
பெரியமதவடி,
சுன்னாகம்.


## கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் அணி சம்பியன்

(சுண்டுக்குளி)

கைதடி மேற்கு சனசமூக நிலையம், அதன் 49ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய விளையாட்டுப் போட்டிகளில் கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் கடந்த 25ஆம் திகதி மின் ஒளியில் நடைபெற்றன.

முதல் அரை இறுதி ஆட்டத்தில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை 3:1 என்ற செற் கணக்கில் 25:20, 22:25, 25:19, 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக அணியை 3 நேர் செற் கணக்கில் 25:20, 25:19, 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் கே.எஸ் விளையாட்டுக்கழக அணியைத் தோற்கடித்தது.

இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை 3:1 என்ற செற் கணக்கில் 20:25, 25:22, 25:19, 25:23 எனற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியன் ஆனது. (ந-7,110)

## நீதித்துறையில் மேற்கொள்ளப்படவிருந்த இடமாற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளன

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்வியை சட்ட விரோதமான முறையில் கற்க முயன்ற மாணவர் ஒருவருக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட, 12 மாத கடூழிய சிறைத்தண்டனையையும் 1,500 ரூபா அபராதத்தையும் விதித்துள்ளது.

இன்னொருவரின பெயரில் பதிவுகளை மேற்கொண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்க முயன்ற தினேஷ் ருவான் பெரேரா என்பவரே இக் குற்றத்திற்காக கொழும்பு பிரதான நீதிவான் சறோஜினி குசல வீரவர்த்தனாவால் தண்டனை வழங்கப்பட்டவராவார்.

குற்றவாளியைக் கடுமையாக எச்சரித்த நீதிவான், குற்றவாளி உள ரீதியாகப பாதிக்கப்பட்டுள்ளாரா என்பதை பரிசோதித்து சிகிச்சை வழங்குமாறும் உத்தரவிட்டார். (ந-7,5)

## பதவி வெற்றிடம்

(சாவகச்சேரி)

தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள 33 அபிவிருத்தி உதவியாளர் பதவிகளுக்கு பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச/மாகாண சேவையில் உள்ளோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். பட்டதாரிகள் 18 தொடக்கம் 45 வயதுக்கிடைப்பட்டோராக இருத்தல்வேண்டும்.

விண்ணப்பங்கள் மே மாதம் 09ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில், பதிவுத் தபாலில் பணிப்பாளர், தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம், 5ஆம் மாடி, செத்சிறிபாய பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். (ந-7,21)

## பூப்பந்தாட்டப் போட்டியில் சுண்டுக்குளி முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பூப்பந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும், இரண்டாம் இடத்தை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும், மூன்றாம் இடத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

19வயது ஆண்கள் பிரிவிற்கான பூப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப3.00 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி விளையாடவுள்ளது. (ந-19)

## சட்டக் கல்வி நுழைவுப் பரீட்சைக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

சட்டக்கல்வி கவுன்சிலினால் தயாரிக்கப்பட்ட புதிய சட்டக் கல்வி நுழைவுப் பரீட்சைத் திட்டமானது கொழும்பு பிரதேசத்தில் இருந்து மட்டும் சட்டத்தரணிகளை உருவாக்கும் நோக்குடனேயே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இதை அமுல்படுத்த அனுமதிக்கக் கூடாது என்றும் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இதனை நீதி அமைச்சர் ஜோன செனவிரட்ன உட்பட அரசாங்கம் கடுமையாக எதிர்க்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

கருத்தரங்கு ஒன்றில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பேராசிரியர் ஜ.எல்.பீரிஸ், ஜே.வி.பியின் உறுப்பினர்கள், ஹெல உறுமய, புதிய இடதுசாரி முன்னணியின் உறுப்பினர்கள் எனப் பலரும் இக்கருத்தரங்கில் கலந்துகொணடிருந்தனர்.

இப்புதிய பிரேரணை அமைச்சரவைக்குக் கொண்டுவரப்படும் போது 60 வீதத்திற்கும் மேற்பட்டோர் இதனை நிராகரிப்பர் என்றும் தெரிவித்த அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே, இந் நுழைவுப் பரீட்சைக்கு தோற்றும் வயதெல்லையை இவர்கள் மாற்றிவிட்டார்கள் எனவும் சுட்டிக்காட்டினார். (ந-6)

## நூலக நடமாடும் சேவை திங்கட்கிழமை முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்தின் நடமாடும் நூலக சேவை எதிர்வரும் திங்கட்கிழமையில் இருந்து ஆரம்பிக்கப்படுமென யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட 12 இடங்களில் இந் நடமாடும நூலக சேவை நடாத்தப்படவுள்ளன. காலை ஒரு இடத்திற்கும், மாலை இன்னொரு இடத்திற்கும் நடமாடும், சேவையில் ஈடுபடும் பஸ் செல்லும். இதேபோன்று ஒழுங்குமுறையாக தொடர்ச்சியாக ஆறு நாட்களும் சேவை இடம்பெறும்.

இதனால் முதற்கிழமை ஒரு புத்தகத்தை எடுத்தவர் மீண்டும் அடுத்தகிழமை அவ்விடத்திற்கு நடமாடும் நூலக சேவை பஸ் வரும்போது அப்புத்தகத்தைக் கொடுத்து மாற்றலாம்.

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட நூலகங்கள் உள்ள பிரதேசங்களுக்கு இந் நடமாடும் நூலக சேவை மேற்கொள்ளப்படமாட்டாது.

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட பாடசாலைகளில் நூலகங்கள் இல்லாத பாடசாலைகளும் இந் நடமாடும் நூலக சேவையின் உதவியைக் கோரினால் அப்பாடசாலைகளிலும் நடமாடும் நூலக சேவை வாரத்திற்கு ஒரு முறை நடாத்தப்படும் என யாழ் மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார். (ந-19)

## நீர் உயிர்வள ஆசிரியர்களின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் நீர் உயிர் வளத் தொழிநுட்ப ஆசிரியர்கள் அனைவரையும் 26.03.2005 வர்த்தமானி பிரசுரத்திற்கு அமைய உள்நாட்டு நன்னீர் தேக்க உயிர்வளத் தொழிநுட்ப பாடத்திற்கான விண்ணப்பத்தினைத் தயாரித்து தத்தமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்திற்கேற்ப ஆசிரியர் பயிற்சி கலாசாலை முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு நீர் உயிர்வள ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ந)

## சட்டவிரோத மின் பாவனை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கைதடி நுணாவில், நுணாவில் பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்றுவந்த பன்னிரண்டு பேர் மின்சார சபையினரின் உதவியோடு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவர்களில் ஒருவர் 10ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் ஏனையோர் தலா 5ஆயிரம் ரூபா சரீரப்பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். (ந-7,21)

## பல்கலையில் கல்வி கற்பதில் மோசடி மாணவனுக்கு 12 மாத கடூழியசிறை

(கொழும்பு)

நீதித்துறையில் அடுத்த மாதம் 2ஆம் திகதி மேற்கொள்ளப்படவிருந்த சகல இடமாற்றங்களையும் இநத வருட இறுதிவரை பிற்போடுவதற்கு நீதிச்சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த வருடம் ஆயிரத்து 500 அதிகாரிகள் இடமாற்றங்கள் பெறவிருந்தனர்.

ஆணைக்குழுவின் செயலாளா சந்திர ஜெயதிலக இதுகுறித்து தகவல் தெரிவிக்கையில்,

இடமாற்றம் பெறவிருந்த அதிகாரிகளின் வேண்டுகோளை அடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

வருடத்தின் நடுப்பகுதியில் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதினால் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

## சுனாமியால் உடைந்த மனங்களை ஒட்டவைப்பதே இன்றியமையாதது

கடல் அனர்த்தம் ஏற்பட்டு 20 நிமிடத்திற்குள் தேசியத்தலைவரின் வழி நடத்தலில் மீட்புப் பணிகளில் எமது போராளிகள் ஈடுபட்டனர். இதனை உலக வல்லரசான அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகள் பாராட்டியுள்ளன என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சூசையப்பர் கல்லூரியில் கடந்த புதன்கிழமை வடக்கு -கிழக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்களம் புத்தாண்டு நிகழ்வொன்றினை நடாத்தியது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அழிந்து போன கட்டடங்களை உலக வங்கி மற்றும் தொண்டு நிறுவனங்களின் துணையுடன் மீள நிர்மாணம் செய்துவிட முடியும். ஆனால் எமக்குத் தேவை உடைந்து போன மனங்களை மீளக்கட்டியெழுப்புவதே. ஆனால் இன்று மூதூர் கிழக்குப் பகுதிகளில் அழிந்து போன வீடுகளைக் கட்டி எழுப்புவது கடினமானதாக இருக்கின்றது. இப்பகுதிகளுககு கட்டடப்பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது. இதனை ஆளுநருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

# மன்னர் ஞானேந்திரா வாக்குறுதி மீறிவிட்டார்
# நேபாளத்திற்கு இனி ஆயுத உதவி இல்லை
## இந்தியா அறிவிப்பு

(புதுடில்லி)

நேபாள மன்னர் ஞானேந்திரா வாககுறுதியை மீறயதைத் தொடர்ந்து நேபாளத்துக்கு இந்தியா மீண்டும் ஆயுத உதவி செய்வதில்லை என்று இந்திய மத்திய அரசு முடிவு எடுத்துள்ளது.

நேபாளத்தில் மவோயிஸ்ட் தீவிரவாதிகளை ஒடுக்க இந்தியா ஆயுத உதவி அளித்து வந்தது. அங்கு பிரதமர் ஷெர் பகதூர் தூபா தலைமையில் இருந்த மக்கள் ஆட்சியைக் கலைத்துவிட்டு நெருக்கடி நிலையை பிரகடனம் செய்து ஆட்சிப் பொறுப்பை மன்னர் ஞானேந்திரா ஏற்றதைத் தொடர்ந்து ஆயுத உதவியை இந்தியா நிறுத்தியது.

சமீபத்தில் இந்தோனேஷியாவில் நடந்த ஆசிய - ஆபிரிக்க மாநாட்டின் போது மன்னர் ஞானேந்திரா பரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தார். அப்போது நேபாளத்தில் படிப்படியாக மக்கள் ஆட்சியை ஏற்படுத்துவதாகவும், இந்தியா ஆயுத உதவியை மீண்டும் தொடங்குமாறும் வேண்டுகோள் விடுத்தார். ஆனால், நேபாளம் திரும்பிய மன்னர் ஞானேந்திரா கைதாகி விடுதலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் ஷெர்பகதூர் தூபாவை மீண்டும் கைதுசெய்தார்.

அதைத் தொடர்ந்து வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் நேற்றுமுன்தினம் மாநிலங்களவையில் கூறியதாவது,

நேபாள மன்னர் ஞானேந்திரா இந்தியாவுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறிவிட்டார். அரசியல் கட்சித் தலைவர்கள மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். நெருக்கடி நிலை நீக்கப்படவில்லை. எனவே, நேபாளத்துக்கு மீண்டும் ஆயுத உதவி அளிக்கப்படமாட்டாது. அது தொடர்ந்து பரிசீலனையில் இருக்கும். இவ்வாறு கூறினார். (ற)

# பிரபல அரசியல் தலைவர் கெயிட்டியில் கடத்தல்

(கெயிட்டி)

கெயிட்டியில் பிரபல அரசியலமைப்பான தேசிய மீள்கட்டமைப்புத் தலைவர் ஜோன் கனோட் துப்பாக்கிதாரர்களினால் கடத்தப்பட்டுள்ளார்.

இந்தக் கடத்தலானது எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் கெயிட்டியில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த தேர்தலைப் பாதிக்கும் எனத் தெரிவக்கப்படுகிறது.

கடத்தப்பட்டவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் அந்த நாட்டின் அமைதி காக்கும் படையினரும், பொலிஸாரும் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# புடின் இஸ்ரேலுக்கு விஜயம்

(ஜெருசலேம்)

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இஸ்ரேலுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம் மேற்கொண்டதுடன், அந்நாட்டுடன் முக்கிய ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளார்.

இஸ்ரேல் - ரஷ்யா இடையே நல்லுறவு இல்லை. கடந்த காலத்தில் இரு நாடுகளும் பனிப்போரில் ஈடுபட்டுவந்தன. இந்நாட்டுக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், நேற்றுமுன்தினம் முதல்முறையாகப் பயணம் மேற்கொண்டார். இந்நாட்டுக்குப் பயணம் செய்த முதல் ரஷ்ய அதிபர் புடின்தான். இஸ்ரேல் அதிபர் மோசே கட்சாவுடன் அவர் பேச்சு நடத்தினார்.

சிரியாவுக்கு ரஷ்யா ஏவுகணைகளை விற்பனை செய்யவுள்ளது. அதேபோல், ஈரானுக்கும் அணு ஆயுத உதவிகள் வழங்குகிறது. ரஷ்யாவின் இந்த நடவடிக்கைகளுக்கு, இஸ்ரேல் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சின்போது, இஸ்ரேலுக்கு இது தொடர்பாக உள்ள அச்சத்தை புடின் போக்கினார். பின்னர், புடினும் மோசேவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியை ஏற்படுத்த இணைந்து செயல்படுவது என்ற இவ் ஒப்பந்தம் ஊடாகத் தீர்மானிக்கப்பட்டது. மேலும, தீவிரவாத நடவடிக்கைகள் கண்டிக்கப்பட்டன.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின் நிருபர்களிடம் பேசிய புடின், "சிரியாவுக்கு ரஷ்யா தரும் ஏவுகணைகளால் இஸ்ரேலுக்கு எவ்வித ஆபத்தும் இல்லை. அந்நாட்டுககு நாங்கள் குறுகிய தூர ஏவுகணைகளை மட்டுமே தருகிறோம். இஸ்ரேல் பகுதிகளை அது தாக்காது" என்றார். (ற)

# அதிகரிக்கும் தீவிரவாதத் தாக்குதல்கள்

எதிர்வரும் ஆண்டில் 2004ஆம் ஆண்டினை விடவும் தீவிரவாதத் தாக்குதல்கள் அதிகரிக்கக்கூடும் என அமெரிக்கப் புலனாய்வு அமைப்பின் அறிக்கைகள் கூறுகின்றன.

கடந்த 2003ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 175 தீவிரவாதத் தாக்குதல்களும், 2004ஆம் ஆண்டில் 650 தாக்குதல்களும் நிகழ்ந்தன.

தற்போது அமெரிக்கப் புலனாய்வு அமைப்புகள் மேற்கொண்ட இரகசிய ஆய்வில் தீவிரவாதத் தாக்குதல்கள் அதிகரிக்கக்கூடும் எனத் தெரியவந்துள்ளது.

இதனால் தீவிரவாதம் தொடர்பாக ஜோர்ஜ் புஷ் அரசாங்கம் பின்பற்றிவரும் கொள்கை முடிபுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென அமெரிக்க அரசியல் அவதானிகள கருத்து வெளியிட்டுள்ளனர். (ற)

# இங்கிலாந்து பொதுத்தேர்தல் பிரச்சினையில் ரொனி பிளேயர்

(இலண்டன்)



இங்கிலாந்தில் பொதுத் தேர்தலைச் சந்திக்கும் பிரதமர் ரொனி பிளேயர், ஈராக் பிரச்சினை, போர் தொடர்பாக அடுத்தடுத்து பல பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறார்.

ஈராக் போர் தொடர்பாக பல உண்மைகளை மக்களிடம் ரொனி பிளேயர் மறைத்துவிட்டதாக சில தினங்களுக்கு முன் அந்நாட்டின் தலைமை வழக்கறிஞரான கோல்ஸ்மித் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இது பிளேயருக்குப் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. ஈராக் போர் தொடர்பாக தாம் உண்மை எதனையும் மறைக்கவில்லை என அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இப் பிரச்சினை தேர்தலில் கடுமையாக எதிரொலிக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ற)

# உ.பி.இல் பயங்கர தீ விபத்து; 23 பேர் பலி; 70 பேர் படுகாயம்

(சென்னை)

உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஏற்பட்ட பல்வேறு தீ விபத்தில் 23 பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

உத்தரப் பிரதேச மாநிலம் கோட்வாலி பதேபூர் என்ற நகரில் நேற்றுமுன்தினம் ஒரு வீட்டிலிருந்து பரவிய தீ அடுத்தடுத்த வீடுகளுக்கும் பரவி 115 வீடுகள் முற்றாக எரிந்து சாம்பலாயின. இந்த விபத்தில் 9பேர் உடல் கருகி இறந்தனர்.

இதேபோன்று முக்கன்பூர் என்ற இடத்தில் ஏற்பட்ட மற்றொரு தீ விபத்தில 8 பேர் உடல் கருகி இறந்தனர்.

மேலும், இம் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட தீ விபத்தால் நேற்றுமுன்தினம் மட்டும் 23 பேர் கருகிப் பலியாயினர். 70க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இம் மாநிலத்தில் தற்போது கடும் காற்று வீசுகின்றது. இதன் காரணமாக தீ வேகமாகப் பரவி பெரும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# ஈராக்கில் புதிய அமைச்சரவை அங்கீகரித்தது பார்லிமென்ட்

(பக்தாத்)

ஈராக்கில் 50 ஆண்டுகளுக்குப் பின்னர், ஜனநாயக முறைப்படி அமைக்கப்பட்ட அமைச்சரவையை பார்லிமெனட் நேற்றுமுன்தினம் அங்கீகரித்தது.

ஈராக்கில் சதாம் உசேன் தலைமையிலான ஆட்சியை அமெரிக்க - பிரிட்டன் கூட்டுப்படைகள் போர் மூலம் கலைத்தன. கடந்த ஜனவரி 30ஆம திகதி அந்நாட்டில் பொதுத் தேர்தல் நடந்தது. 50 ஆண்டுகளுக்குப் பின் ஈராக்கில ஜனநாயக முறைப்படி நடந்த முதல் தேர்தல் இது.

சதாம் சன்னி இனத்தைச் சேர்ந்தவர். அவர் இனத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் தேர்தலைப் புறக்கணித்தன.

வெற்றி பெற்ற கட்சிகள் அனைத்தும இணைந்து, ஷியா இனத்தைச் சேர்ந்த இப்ராகிம் அல் ஜபாரியை பிரதமராக ஏறறுள்ளன. அவர் தலைமையில் அரசு அமைக்கப்பட்டுள்ளது. புதிய அமைச்சரவையை இவர் அமைத்துள்ளார். இவர் தாக்கல் செய்த அமைச்சர்களின் பட்டியலை, பார்லிமெனட் நேற்றுமுன்தினம் அங்கீகரித்தது. இவர்களில் 36 பேர் தற்காலிக அமைச்சர்கள். இதன்மூலம் 50 ஆண்டுகளுக்குப் பின் ஈராக்கில் ஜனநாயக முறைப்படி அமைக்கப்படும் முதல அமைச்சரவை என்ற பெருமையை இது பெற்றது.

வழக்கம் போல், ஈராக்கில் தீவிரவாதிகள் நேற்றுமுன்தினமும் தாக்குதல் நடத்தினர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதலில் எட்டுப் பேர் கொல்லப்பட்டனர். 35 பேர் காயமடைந்தனர்.

சமாராவில் சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைககிளில் இருந்த குண்டு வெடித்து, இரண்டு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

இதேவேளை பாக்தாத்தில் உள்துறை துணை அமைச்சரின் உதவியாளராக இருந்த மேஜர் ஜெனரல் ஒருவரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்[illegible]னர்.

இந்நிலையில், ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன், அமெரிக்க இராணுவத்தின் பாதுகாப்பில் நேற்றுமுன்தினம் தனது 68ஆவது பிறந்தநாள் விழாவை கொண்டாடினார்.

ஈராக்கின் அசைக்கமுடியாத அதிபராக இருந்த சதாம் உசேன்ன, அமெரிக்க - பிரிட்டன் கூட்டுப்படைகள் அசைத்தன; அவரை ஆட்சியில் இருந்து விரட்டின. அவர் மகன்களைக் கொன்றனர்; மகள்கள் நாட்டைவிட்டு ஓடிவிட்டனர்.

தற்போது, அமெரிக்க இராணுவத்தின் பிடியில் சதாம் உள்ளார். தனி கோர்ட் அமைக்கப்பட்டு அவர் மீது விசாரணை நடத்தப்படுகிறது. அவருக்கு மரண தண்டனை விதிக்கும்படி கோரப்பட்டு வருகிறது.

சதாமுக்கு நேற்றுமுன்தினம் 68ஆவது பிறந்தநாள். அதிபராக இருந்தபோது, ஆணடுதோறும் தன் பிறந்தநாளை பிரமாண்ட விழாவாக சதாம் கொண்டாடுவார். நேற்றுமுன்தினம் அமெரிக்க இராணுவத்தின் பிடியில் பிறந்தநாளை கொண்டாடினார். (ற)

# மாநில அமைச்சர்களை தொகுதிக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது
## தேர்தல் ஆணையரிடம் எதிர்க்கட்சி மனு

(சென்னை)

காஞ்சிபுரம் மற்றும் கும்மிடிபூண்டி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் இடைத் தேர்தலில் போட்டியிடும் இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரத்தில் 20பேரும் கும்மிடிபூண்டியல் 16 பேரும் போட்டியிடுகின்றனர்.

இதற்கிடையே இடைத்தேர்தல் பாதுகாப்புக்கு கூடுதலாக மத்திய றிசேவ் பொலிஸ் படையை இரு தொகுதிகளுககும் அனுப்ப வேணடுமென்று தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.கள் மத்திய தேர்தல் ஆணையாளர்களைச் சந்தித்து மனுவொன்றைச் சமர்ப்பித்தனர்.

கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல்களின் போது நிகழ்ந்த வன்முறைகள் வரும் இடைத் தேர்தலிலும் அரங்கேறாமல் தடுக்கவேண்டுமெனவும் கூடுதலாக மத்திய பார்வையாளர்களை நியமிக்கவேண்டும்; மாநில அமைச்சர்களை தொகுதிக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது உள்ளிட்ட கோரிக்கைகளும் அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (து)

# இந்தியாவுக்கு 'வீட்டோ' அதிகாரம் கிடையாது
## ஐ. நா. செயலாளர் நாயகம் அறிவிப்பு

(புதுடில்லி)

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு 'வீட்டோ' அதிகாரத்துடன் கூடிய நிரந்தர உறுப்பினர் பதவி வழங்கும் வாய்ப்பு இல்லையென்று ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் கூறியுள்ளார்.

மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள்ள அவர் டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேசியதையடுத்து ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சில் விரிவாக்கம் பற்றி இந்த ஆண்டு முடிவுக்குள் முடிவெடுக்கப்படுமென்றும் பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைக்குமா என்று தம்மால் கூறஇயலாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்புக் கவுன்சிலில் புதிதாகச் சேர்க்கப்படும் எந்த நாட்டுக்கும் 'வீட்டோ' அதிகாரம் வழங்கப்பட மாட்டாது என்று அனான் திட்டவட்டமாகக கூறியுள்ளார்.

பாதுகாப்புக் கவுன்சில் விறியோகத்தின் போது 'வீட்டோ' அதிகாரமில்லாத நிரந்தர உறுப்பனர் அல்லது சுழற்சி முறை உறுப்பினர் பதவிகள்தான் புதிய உறுப்பினர்களுக்குக கிடைக்குமென்றும அனான் தெரிவித்தார். (து)

# உயிரிழப்பு அதிகரிப்பு

ஜப்பான் நாட்டையே கடந்த சில தினங்களுக்கு முன்னர் உலுக்கிய ரயில் விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 101ஆக உயர்ந்துள்ளது.

தீயணைப்புப்படையினர் போராடி உடல்களைத் தொடர்ந்தும் மீட்டு வருவதாக அத்துறையின் பேச்சாளர் தெரிவித்தார்.

இடிபாடுகளுக்கிடையே எவரேனும் மாட்டியுள்ளனரா என்று தீர்மானமாகத் தெரியும்வரை தேடுதல் நடவடிக்கை தொடரும் என மீட்புப்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ற)

# பத்திரிகையாளர் சிவராம் படுகொலைக்கு பல்வேறு தரப்பினரதும் கடும் கண்டனம்

## உள்நாட்டு ஊடகவியலாளர்கள் அமைப்பு

சிரேஷ்ட ஊடகவியலாளரும் இராணுவ மற்றும் அரசியல் ஆய்வாளருமான தர்மரத்தினம் சிவராம் (தராக்கி) படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது கருத்து சுதந்திரத்திற்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள் இருக்கின்றது என்பதை மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளதாக இலங்கையின் உள்நாட்டு ஊடகவியலாளர் அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் சங்கம் இப்படுகொலை சம்பவமானது தமிழ் ஊடகத்துறையினருக்கு மட்டுமன்றி அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். இது அதிர்ச்சியையும் வேதனையையும் அளித்துள்ளது. தமிழர்களின் போராட்டத்தின் நியாயத்தன்மையை மிகவும் தெளிவாக சர்வதேச சமூகத்திற்கும் உள்நாட்டில் ஏனைய இனத்தவர்களுக்கும் எடுத்துக் கூறியவர் சிவராம். மட்டக்களப்பு ஊடகவியலாளர் சமூகம் ஊடகவியலாளர் ஜி.நடேசனை இழந்து ஒரு வருடத்திற்குள் மற்றுமொரு ஊடகவியலாளரை தமிழர் தாயகம் இழந்துவிட்டது. மட்டக்களப்பில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த வருடம் மே மாதம் 31 ஆம் திகதி ஜி. நடேசன் படுகொலை செய்யப்பட்டார். இவ் வருடம் தலைநகர் கொழும்பில் டி. சிவராம் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதற்கான பொறுப்பை அரசுதான் ஏற்க வேண்டும். சுதந்திர ஊடகவியலாளர் சங்கம் ஊடகவியலாளர் ரிச்சர் டீ சொய்சா அரசியல் படுகொலை செய்யப்பட்டது போன்று ஊடகவியலாளர் டி.சிவராமும் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இப் படுகொலைச் சம்பவமானது கருத்துச் சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும். தென்கிழக்கு செய்தியாளர்கள் சங்கம் அன்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையில் தொடங்கிய தமிழ் ஊடகவியலாளர் படுகொலை தொடரின் ஒரு கட்டமே இப்படுகொலையாகும். இதற்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பதே கேள்விக்குறியாகும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா

பத்திரிகையாளர் டி. சிவராம் கடத்தப்பட்டார் என்ற தகவலும் பின் அவர் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தியும் ஊடகத்துறையினருக்கு மட்டுமல்ல எமக்கும் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது.

டி. சிவராம் நன்கு எனக்கு நீண்ட காலமாகவே அறிமுகமான ஒரு எழுத்தாளர், பத்திரிகையாளர். மட்டக்களப்பைச் சேர்ந்தவர். இடதுசாரி குடும்பச் சூழலில் வாழ்ந்தவராயினும் தமிழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து வந்தார். ஆரம்பத்தில் உமாமகேஸ்வரனுக்கு நெருக்கமாகவும் "புளொட்" இயக்கத்தை சார்ந்தும் இருந்தார்.

பின் அதனின்றும் விடுபட்டவராய் பல ஆங்கில தமிழ் பத்திரிகைகளில் அரசியல் இராணுவ விமர்சனக் கட்டுரைகளை எழுதி வந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கருணா அம்மானுடன் சந்தித்து பேசும் நண்பராகவும் இருந்தவராய் தகவல்கள் தெரிவித்தன.

ஆனால் கருணா அம்மான் வன்னித் தலைமைக்கு எதிராகச் சென்றதை ஏற்காது விமர்சனம் செய்து தமிழர் தாயகக் கோட்பாட்டின் பற்றுறுதியை வெளிப்படுத்தி வந்தவர் ஆவார். இராணுவக் காவல்துறையுடன் ஆட்சிக்கட்டுப்பாட்டில் உள்ள கொழும்பு நகரில் ஊடகவியலாளர் டி. சிவராம் அவரின் ஊடகத்துறை நண்பர்களிடம் இருந்து கடத்தப்பட்டு மறுநாள் காலையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்குப் பக்கத்தில் கொலைசெய்யப்பட்ட உடல் காணப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் மட்டக்களப்பு ஊடகவியலாளர் ஜீ. நடேசன் கொலைக்கு பின் டி. சிவராமின் கொலை ஊடகத்துறைக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகும். அபாய அறிவிப்பாகும். ஊடகவியலாளர் டி. சிவராம் கொலை செய்யப்பட்டமைக்கு எமது கண்டனத்தை வெளிப்படுத்துகிறோம். அதே வேளை அரசு இச்சம்பவம் தொடர்பான பொறுப்பை தட்டிக்கழிக்க முடியாது.

## பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்

தனக்கென திட்டவட்டமாக கொள்கை வகித்துக்கொண்டு அதேவேளை ஈழத் தமிழரின் எதிர்காலத்தை ஒட்டி மிக்க அக்கறையுடன் கருத்து வழங்கியவர் சிவராம் (தராக்கி), எதனையும் ஊடுருவிப் பார்த்து துணிவோடு கருத்துக்களை சொல்லும் ஆற்றல் படைத்தவர் இவர். இராணுவ புலனாய்வு ஊடகத்துறையில் ஆய்வாளராக விளங்கிய இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல செய்தி இதழ்களிலும் வானொலி, தொலைக்காட்சியிலும் இவர் வெளியிட்டுள்ள குறிப்புகள் செய்திகள் எம் சிந்தனையை தூண்டுபவையாக விளங்கின. அவருடைய சில கருத்துக்களை நாம் ஏற்காத நிலையில் கூட ஏன் அவர் இப்படிச் சிந்திக்கின்றார் எழுதுகின்றார் என்று எம்மை ஆழமாக சிந்திக்க வைத்தது. இதுதான் ஊடகத்துறையில் அவர் நிலைநாட்டிய தனி முத்திரை.

தமிழருக்கு இன்றைய சூழ்நிலையில் "North-East herald" என்ற திங்கள் இதழ் நீங்கலாக வேறொரு ஆங்கில இதழும் இலங்கையில் இல்லை. இந்நிலையில் இவர் கருத்தை ஏற்காத ஆங்கிலச் செய்தி இதழ்கள் கூட இவரின் தகுதியை புறக்கணிக்க முடியாத நிலையில் இவரின் கட்டுரைகளை வெளியிட்டுத்தான் உள்ளன.

சுருங்கக் கூறின் எந்த ஊடகத்துறையில் உள்ளவரிடமும் தேவையற்று மோதாது. ஆனால் தன் கொள்கையை விட்டுக்கொடுக்காது கருத்துக்களை வழங்கிய தலைசிறந்த ஊடகவியலாளர் சிவராம் என்பது இங்கு நினைவுகொள்ளத் தக்கது. வாழ்வின் இறுதிக் கட்டம் பம்பலப்பிட்டியவில் உள்ள உணவுச் சாலையில் தனது சிங்கள ஊடக நண்பர்களுடன் கழிந்தது என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது. எமக்கு கிடைத்த இறுதிச் செய்தியின்படி இவருடைய உடல் கோட்டை நாடாளுமன்றத்தின் அருகில் உள்ள ஜப்பான் நட்புறவுப் பாலத்திற்கருகில் வீசப்பட்டுள்ளது என அறியக்கிடக்கின்றது.

இலங்கையில் சுதந்திரமாக கருத்துத் தெரிவிக்கின்ற ஊடகவியலாளர்கள் இனவெறியர்களால் சாகடிக்கப்பட்டு வந்துள்ளார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு றிச்சட் டி சொலிசா, அதையடுத்து பி.பி.ஸி. ஊடகவியலாளர் நிமலராஜன் வீட்டில் வைத்து சுடப்பட்ட நிகழ்ச்சியும், அண்மையில் நடுநிலையில் நல்ல கருத்துக்களை வழங்கிய ஊடகவியலாளர் நடேசன் மட்டக்களப்பில் சுடப்பட்ட செய்திகள் எல்லாம் ஊடக சுதந்திரத்துக்கு உலை வைக்கும் நிகழ்ச்சிகள் நாட்டில் தொடர்ந்து நடைபெறுகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அத்தோடு இவரை வலிந்து இழுத்துச் சென்ற வெள்ளை வான் எந்த அரசியல் கும்பலுக்கு உரியது என்பதும் நாம் சிந்தனைக்கு கொள்ளவேண்டியதாகும். அண்மையில் சிவராம் இல்லாத வேளையில் அவரது இல்லத்தில் புலனாய்வுப் பிரிவினர் சென்று சோதனை நடாத்தி அவரின் மனைவி மக்களை துன்புறுத்திய செய்தி இவரின் இச் சாகடிப்போடு புலனாய்வுப் பிரிவின் செயற்பாடு பற்றி பல கேள்விகள் எழுகின்றன. இவையும் ஆராயப்படவேண்டும்.

இவ்வாறு தொடர்ந்து நடைபெறும் கொலைகளை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மாறாக நாம் கூட்டாக குரல் எழுப்பி இதற்கு செயல் வடிவம் கொடுத்து இவ் அநியாய சாகடிப்புகளை தடுத்து நிறுத்தியே ஆக வேண்டும். இதனை தடுத்து நிறுத்த நாம் தவறுவோம் ஆயின், எம்மை பழி சூழ்வது ஒருபுறம் இருக்க நாமே இவ் வெறிச் செயலுக்கு பலியாகும் ஆபத்து உண்டு. எனவே அனைவரும் கொடிய கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உடன் நடவடிக்கையில் இறங்குவோம் ஆக.

## யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

உண்மையை எடுத்துரைப்பதற்கேயான துணிச்சலும் மட்டுமல்லாது ஒடுக்கப்படும் தமிழ்த்தேசிய இனத்தின் மனித உரிமைகளை மீட்பதற்கான ஊடகப் போராளியாக கருத்துவெளிப்பாடுகளை மேற்கொண்ட ஒரு உன்னத மனிதனான டி.சிவராம் அவர்களை கோழைத்தனமாக மனிதத்தின் எதிரிகள் கொன்றுவிட்டனர்.

தமிழ் ஊடகவியலாளர்களை படுகொலை செய்யும் அரசாங்கத்தினதும் அதன் ஏவலாளர்களினதும் அடாவடித்தனம் தொடர்கதையாகிவிட்டது.

இக் கொடூரச்செயற்பாடுகள் முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டியவை. அனைத்துலகத்திலும் செல்வாக்குச் சரிவைக்கண்டு வரும் அரசாங்கமே இதற்கு முழுப்பொறுப்பையும் எடுக்கவேண்டும். இப் படுகொலை மூலம் அனைத்துலக அரங்குகளில் காலடி எடுத்துவைப்பதற்கு அருகதை இழந்துவிட்டது அரசாங்கம்.

மனித உரிமைகளின் முக்கியத்துவம் பெறுகின்ற கருத்துவெளிப்பாட்டு சுதந்திரத்தை நசுக்கிவிட முயலும் கீழ்த்தரமான தந்திரோபாயங்களை அரசும் அதன் படைத் தரப்பும் இராணுவ துணைக்குழுவும் மேற்கொள்கிறது என்பது இக்கொலை மூலம் புலனாகிறது. அரசாங்கத்தின் கோரமுகத்தை சர்வதேச சமூகம் புரிந்துகொள்வதுடன் கண்டிக்கவும் வேண்டும் என எதிர்பார்கின்றோம். பத்திரிகையாளர் டி. சிவராம் படுகொலை செய்யப்பட்டதை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எமது அழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன்

பிரபல பத்திரிகையாளரும் அரசியல் இராணுவ ஆய்வாளருமான தராக்கி என்று அழைக்கப்படும் சிவராம் அவர்கள் கொழும்பு பம்பலப்பிட்டியில் இருந்து நேற்று இரவு கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுப்பதில் அவரது ஆய்வுக் கட்டுரைகள் மிகச் சிறந்த பங்கைச் செய்துள்ளன. மிகப்பரந்த வாசிப்பு பழக்கமுள்ள இவர் இராணுவப் புலனாய்வு நடவடிக்கைகளை மாத்திரமின்றி இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய, அமெரிக்க சீனத்தலையீடுகளையும் அவர்களது நலன் சார்ந்த விடயங்களையும் ஆய்வு செய்து எழுதியவர்.

சிங்கள, பௌத்த பெரும் தேசியவாதம், அதற்குள் இருந்து சிங்கள மக்களால் மீள முடியாத நிலை, ஜே.வி.பியின் இனவாத வங்குரோத்துத்தன அரசியல் தொடர்பாகவும் தமிழர் தரப்பின் தவறுகள் தொடர்பாகவும் இவர் மிகக் கடினமாக விமர்சித்து வந்துள்ளார்.

இவ்வாறான பத்திரிகையாளன் ஒருவரை கொலை செய்வது, மக்களுக்கு உண்மையான செய்திகள் சென்றடைவதை விரும்பாதோரின் செயற்பாடாகவே இருக்கும். இவரது வீடு பலமுறை அரசபுலனாய்வுத்துறை மற்றும் பொலிஸாரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இவருக்கு அரசுடன் இயங்கும் தமிழ் குழுக்களுடன் இருந்தும் அக்குழுக்களின் பெயரை பாவித்து கொலைகளை கட்டவிழ்த்துவிடும் ஆயுதப்படைகளின் பல்வேறுபட்ட பங்கங்களில் இருந்தும் இவருக்கு பலமுறை கொலை மிரட்டல் வந்துள்ளன.

கொழும்பின் மத்திய பகுதியில் இருந்து ஆடம்பர வாகனம் ஒன்றில் கடத்தப்பட்ட இவர் பாராளுமன்றத்துக்கு பின்புறமாக உள்ள இடத்தில் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டார் என்பது, கொழும்பையும் அதன் சுற்றுப் புறங்களையும் அறிந்த சகல வசதிகளையும் கொண்ட ஒரு குழுவினராலேயே நடத்தப்பட்டிருக்கின்றதென்பதை வெளிப்படுத்துகின்றது. கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொலைகள் படிப்படியாக கொழும்பு நகரையும் வந்தடைந்துள்ளது.

இலங்கையில் பொருளாதார வளர்ச்சிக்கோ அரசியல் ஸ்திரத்தன்மைக்கோ இது ஆரோக்கியமான சூழலாக தோன்றவில்லை. ஜே.வி.பியினதும், ஜாதிகஹெல உறுமயவினதும் இன்னும் பல்வேறுபட்ட குழுக்களும் தமிழனுடன் பேசாதே, தமிழனுக்கு உரிமைகளைக் கொடுக்காதே என்று கூக்குரலிடும் நேரத்தில் சிவராமன் அவர்களின் கொலையும் நடந்தேறியுள்ளது.

இதன் மூலம் தமிழர் கருத்துக்கு வாய்ப்பூட்டுப் போடலாம் என நினைப்பதென்பது முடியாத காரியமாகும். தமிழருக்கு எதிராக பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் கொலைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. கிராமம் கிராமமாக தமிழ்மக்கள் சிங்களக் காடையர்களால், ஆயுதபாணிகளால் கொலை செய்யப்பட்டார்கள். ஆனால் ஒவ்வொரு முறையும் பீனிக்ஸ் பறவைபோல் மீண்டெழுந்தே வந்துள்ளான்.

உண்மைகளைத் தெரிந்து கொண்டு சிவராமின் கொலையாளிகளை கண்டுபிடிக்கும்படி நாம் அரசிடம் கேட்டால் நாம் முட்டாள்களாகிவிடுவோம். தமிழ்த் தேசியத்தின் உரிமைக்குரலாக செயற்பட்டு தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதே நாம் சிவராம் அவர்களுக்கு செலுத்தும் அஞ்சலியாகும்.

## பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன

சுதந்திரமாக சுயாதீனமாக மக்களுக்கு சரியான தகவல்களையும் செய்திகளையும் வழங்கிக் கொண்டிருந்த ஊடகத்துறையின் பிரசித்திபெற்ற ஊடகவியலாளரும் டெய்லிமிரர் பத்திரிகையாளரும், தமிழ்நெற் இணையத்தளத்தின் அதிபருமான டி. சிவராமன் அவர்கள் பம்பலப்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் முன்னிலையில் பிராடோ வாகனத்தில் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது மிகவும் மிலேச்சத்தனமானதும் கண்டிக்கத்தக்கதுமான கொடூர செயலாகும். டி. சிவராமன் அவர்கள் மக்கள் சுதந்திரத்திற்காகவும் அவர்களின் நலன் கருதியும் பாடுபட்ட சிறந்த ஊடகவியலாளர் ஆவார். இவர் இவ்வாறு மனிதாபிமானமற்ற முறையில் கொலைசெய்யப்பட்டதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். கடந்த சில மாதங்களில் சிவராமன் அவர்கள் மக்கள் விடுதலை முன்னணியின் கண்டனங்களுக்கு பகிரங்கமாக உட்பட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் பொதுக் கூட்டங்களில் அவரை பகிரங்கமாக சாடினர். மேலும் ஜனாதிபதி, அமைச்சர் மங்கள சமரவீர, அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க உட்பட்ட குழுவினர் சுதந்திர ஊடகத்துறைக்கு எதிராக பெரும் திட்டத்தை தீட்டியுள்ளார்கள். மக்கள் விடுதலை முன்னணியினர் அவர்களது ஆரம்பக் காலத்தில் நடைமுறைப்படுத்தியது போல ஊடகத்துறைக்கு எதிராக செயற்பட முனைந்துள்ளனர். விசேடமாக கொலை செய்யப்பட்ட டி. சிவராமனுக்கு எதிராக ஊடக அமைச்சர் விமல் உட்பட்ட குழுவினர் கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

தமிழ்நெற் வெப்சைட்டின் மூலம் சரியானதும் சமூகத்திற்கும் அவசியமானதுமான தகவல்களை வழங்கியதோடு தமிழர்களின் உரிமைக்காகவும் தமது ஊடகத்துறை மூலம் குரல் கொடுத்தவர். நிமலராஜன் கொலையை மூடி மறைத்து இது தொடர்பாக சரியான பரிசீலனைகள் மேற்கொள்ளப்படவில்லை. இக் கொலையையும் அவ்வாறு விட்டுவிட அரசாங்கத்திற்கு இடமளிக்கமுடியாது. சிவராமனை பம்பலப்பிட்டியவில் வைத்து கடத்தியது யார்? அவர்கள் வந்த வாகனம் யாருடையது? இந்தச் சம்பவத்தின் பின்னணி எது? இந்தக் கேள்விகளுக்கு அரசாங்கம் கண்டிப்பாக பதில் தேட முனையவேண்டும்.

சுதந்திரமாக தன்னிச்சையாகச் செயற்படும் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படுவது மிகவும் வேதனைக்குரிய கண்டிக்கத்தக்க விடயமாகும். இதனால் சுதந்திர ஊடகத்துறை பின்னடையலாம். சிவராமனின் சுதந்திர செய்தியை பொறுக்காது விமல் வீரவன்ச அவருக்கு மரண அச்சுறுத்தலை பகிரங்கமாக விடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது என டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர் - குறள்.

வலம்புரி

# துப்பாக்கிக் குண்டுதான் ஜனநாயகத்திற்கு பரிசா?

இலங்கைத் தீவில் ஜனநாயகம் குழிதோண்டிப் பூதைக்கப்பட்டுவிட்டது. நாட்டில் அராஜகமும், அக்கிரமமும் முன் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு நாட்டைச் சீரழித்துக் கொண்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சாசனத்தின் மனித உரிமைப் பிரகடனத்தில் மனித உயிர்களின் பாதுகாப்புக்கு உறுதியளிக்கப் பட்டிருக்கிறது. அதனை அரசியல் யாப்பில் இணைத்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தீவில் மனித உயிர்களின் பறிப்பு தினம் தினம் பூப்பறிப்புப்போல சகஜமாக இடம்பெறுகிறது.

சமூகத்தை நெறிப்படுத்தி தகவல்களைப் பரிமாறி, சீரமைப்படுத்தும் பாரிய பொறுப்புக்களை தாங்கிக்கொண்டு, ஜனநாயகத்தின் வழியதில் நம்பிக்கை கொண்டு உழைப்பவன் தான் ஊடகவியலாளன். அத்தகைய ஊடகவியலாளன் சமூகத்தின் விளைவுகளை பிரதிபலிக்கும் கண்ணாடி போன்றவன். அவனை உடைத்துப் பார்ப்பது சமூகத்தை அழித்து விடுவதற்கு சமமாகும். இதனை உணர்ந்து கொள்ளாமல் ஜனநாயகத்தின் குரல் வளையை நசுக்கி ஊடகவியலாளர்களை அழிக்கின்ற நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

இந் நிலையில் இலங்கைத் தீவில், அதுவும் தலைநகர் கொழும்பில் தமிழ் ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் இனம்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இது ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தல். ஜனநாயகவாதிகளை, எழுதுகோலால் சமூகத்தை நெறிப்படுத்துபவர்களை, துப்பாக்கிக் குண்டுகளால் அழிப்பது காட்டுமிராண்டித்தனமானதும், கண்டிக்கத்தக்கதுமான விடயமாகும். ஊடகவியலாளர்களை தாக்குவதும், அழிப்பதுமான பட்டியல் இலங்கைத் தீவில் நீண்டு செல்கிறது. ஜனநாயகவாதிகளுக்கு துப்பாக்கி குண்டுகளை பரிசாக வழங்குவது நாட்டில் கலாசாரமாக மாறிவிட்டது.

ஊடகவியலாளர் நிமலராஜன், நடேசன் பட்டியலில் சிவராமும் படுகொலை செய்யப்பட்டமையானது பத்திரிகையாளர்களையும், மனிதநேயம் மிக்கவர்களையும் மீண்டும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

தனது ஆழ்ந்த புலமையினாலும், பரந்து விரிந்த அறிவினாலும், எழுத்தாற்றலினாலும், மக்கள் மத்தியில் தனியிடம் பெற்றிருந்தவர் ஊடகவியலாளர் சிவராம்.

ஊடகவியலாளரின் உயிருக்கு இலங்கையில் உத்தரவாதம் இல்லை என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

இந் நிலைமை உடனடியாக தடுத்து நிறுத்தப்படவேண்டும். இதற்கு சர்வதேச ஊடகவியலாளர் அமைப்புக்களும், மனித உரிமை அமைப்புக்களும், மனிதநேய அமைப்புக்களும், சர்வதேச சமூகமும் அழுத்தம் கொடுக்கவேண்டும். ஊடகவியலாளரின் சமூகப் பணி தொடர உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். வெறுமனே கண்துடைப்புக்காக அறிக்கை விடாது ஆக்கபூர்வமான நடவடிக்கையில் விரைந்து ஈடுபட வேண்டும். இதனையே பத்திரிகை உலகம் எதிர்பார்க்கிறது.

கொழும்பில் தமிழ்ப் பத்திரிகையாளர் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டமைக்கு பதில் கூற வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. எனவே அரசு இன, மத, மொழி பேதங்கள் கடந்த நிலையில் ஜனநாயக நோக்கில் குற்றவாளியை நீதிவான் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வழமையான கோவை நிரப்பல் நடவடிக்கை போன்று சிவராமின் படுகொலை வழக்கையும் மூடி மறைத்து முற்றுப்புள்ளி வைக்கக் கூடாது.

சட்டத்திலும், நீதியிலும் மக்கள் நம்பிக்கை கொள்ள சரியான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும்.

# ஐ.நா பொதுச் செயலாளராக ஆசிய நாட்டவரே வரவேண்டும்

## கொபி அனான் விருப்பம்

ஆசியாவைச் சேர்ந்த ஒருவர் ஐ.நாவின் அடுத்த பொதுச் செயலராக வரவேண்டும் என ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் நாயகம் கொபி அனான் விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா பொதுச் செயலர் கொபி அனானின் பதவிக்காலம் இந்த ஆண்டு இறுதியுடன் நிறைவடைகிறது. மூன்று நாள் பயணமாக இந்தியா சென்ற அவர் ஜனாதிபதி அப்துல்கலாம, பிரதமர் மன்மோகன்சிங் உட்பட பலரையும் சந்திதது விரிவான பேச்சு நடத்தினார். பயணத்தின் கடைசி நாளான நேற்று முன்தினம் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறுகையில்,

"கடந்த 1961இல் மியான்மரைச் சேர்ந்த யூ.தண்ட் என்பவர் ஐ.நா பொதுச் செயலராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் ஆசியாவைச் சேர்ந்தவர்கள் ஐ.நா பொதுச் செயலராக தேர்ந்தெடுக்கப்படவில்லை.



சுழற்சி முறையில் பொதுச் செயலர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அடுதத பொதுச் செயலர் ஆசியாவைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்'' என்றார்.

ஐ.நா பொதுச் செயலருக்கான வேடபாளராக தாய்லாந்து துணைப்பிரதமர் சுராகியார்ட் சாத்திராத்தை தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு அறிவித்துள்ளமை குறிப்பிடததக்கது. (ற)

# மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகள் எதனையும் கூட்டமைப்பு அரசு இதுவரை நிறைவேற்றவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சுட்டிக்காட்டு

(மாத்தறை)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகள் எதனையும் அரசாங்கம் இதுவரை நிறைவேற்றவில்லையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.



மாத்தறையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமி நிதியுதவிகளை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தாமல் தனிப்பட்ட செயற்றிட்டங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு கூட்டமைப்பு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுகுறித்து உலக வங்கிக்கும் ஏனைய உதவி வழங்கும் அமைப்புக்களுக்கும் தெரிவிக்கப்படவுள்ளது. அவசர உதவியாக கிடைக்கப்பெற்ற 7 ஆயிரம் கோடி ரூபாவிற்கு என்ன நடந்தது? என்பது குறித்து தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லையெனவும் ரணில் மேலும் சுட்டிக்காட்டினார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமை குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் மாலை மாததறைப் பகுதிக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர், அங்கு நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நிதியை அவர்களுக்கு வழங்காமல் மோசடி செய்யும் நடவடிக்கைகளை கூட்டமைப்பு அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

உலக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் மற்றும் இங்கு வெளியிடப்படும் புள்ளிவிபரங்களுக்கு இடையில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-9)

# ஆனையிறவு படைத்தள வெற்றிக்கு தலைவரின் மதிநுட்பமே காரணம்

## -கேணல் தீபன்

(ஆனையிறவு)

தமிழ்த் தேசியத் தலைவரின் மதிநுட்பம் வாய்ந்த போரியல் திட்டத்தின் மூலமாகவே இராணுவத்தினரின் பலம் பொருந்திய ஆனையிறவு படைத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெற்றி கொள்ளப்பட்டது என வடமுனைத் தளபதி கேணல் தீபன் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு மீட்பு, தீச்சுவாலை முறியடிப்பு ஆகியவற்றின் 5 ஆம் ஆண்டு வெற்றிவிழாவின் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

ஆனையிறவு படைத்தளத்தின் வீழ்ச்சியானது ஸ்ரீலங்காப படைகளுக்கு மனோநிலை ரீதியாகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

மிகவும் உச்சக்கட்ட பாதுகாப்போடு இருந்த ஒரு தளம் என்பதோடு மட்டுமல்லாமல் பல ஆண்டுகளாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தளம் தமிழீழ விடுதலைப புலிகளினால் வீழ்த்தப்பட்டதென்பதும் ஸ்ரீலங்காப் படைகளுக்குப் பெரும் நெருக்கடிகளை உருவாக்கியுள்ளன.

அத்துடன், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் [illegible]கடிக்க முடியாது என்பதை அனுபவ ரீதியாக ஸ்ரீ[illegible]காப் படைகள உணர்ந்துள்ளன. ஆனையிறவு படைத்தள [illegible]யுடன். ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட தீச்சு[illegible] நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்தமையால் ஸ்ரீ[illegible] படையினர் தமது யதார்த்த நிலையை உணர்ந்து[illegible]

தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தினை ஆ[illegible] படைத்தள வீழ்ச்சியுடன்தான் சர்வதேச சமூகம் [illegible] கொண்டது. ஆனையிறவு படைத்தளத்தினை பு[illegible] ரீதியாக ஆராய்ந்த இராணுவ வல்லுநர்கள் விடு[illegible] புலிகளினால் ஆனையிறவினை வீழ்த்த முடியாது [illegible] கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், விடுதலைப் புலிகளிடம் ஆனை[illegible] படைத்தளம் வீழ்ந்ததானது விடுதலைப் புலிகளை [illegible] காப் படையினர் என்றுமே வெல்லமுடியாது என்ப[illegible] உணர்த்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் இராணுவ சக்தியை வெளிப்[illegible] படுத்திய சமராக ஆனையிறவுத் தள வெற்றி அ[illegible] துடன், இதன் வெற்றிக்காகப் பரந்தனில் விடுதலைப் புலி[illegible] மேற்கொண்ட பகல் நேர சமர்கள், குடாரப்பு தரையிறக்[illegible] என்பனவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்[illegible] குறிப்பிட்டார். (ற-4)

# அடக்குமுறைகளுக்கு எதிராக குரல்கொடுக்க அணிதிரள்க!

## அதிபர், ஆசிரியர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை நடைபெறவுள்ள மேதின ஊர்வலத்திலும் கூட்டத்திலும் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல அதிபர்களையும், ஆசிரியர்களையும் கலந்துகொண்டு கல்விப்புலம் சார்ந்த கோரிக்கைகளை முன்வைப்பதுடன் இனரீதியான அடக்குமுறைகளை எதிர்த்து உரத்தகுரல் எழுப்பிடவும் அணிதிரளும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

வடககு-கிழக்குப் பகுதிகளில் பாரிய இராணுவ முகாம்கள உள்ளதுடன், பல பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயததினுள் அகப்பட்டும் காணப்படுவதனால் தமிழ் மாணவர்களின் கல்வி சுதந்திரமற்ற நிலையிலே காணப்படுகின்றது.

தமிழ் மாணவர்களது கல்விச் செயற்பாடுகள் சுதந்திரமாக நடைபெறவேண்டும். இதற்காக பாடசாலைகளை உள்ளடக்கியுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளிடம் அரசு இடைக்கால நிர்வாகத்தை வழஙகி தமிழ் மக்கள் தமது தாயகப் பிரதேசத்தில் சகல உரிமைகளுடன் வாழ சர்வதேச சமூகம் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுத்தல் வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேதினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ற-19)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஆன்மாவுடன் நம்மை ஒன்றுபடுத்திக் கொண்டு அ[illegible] வளர்ச்சியில் நாட்டம் செலுத்துந்தோறும் இறை நிலை[illegible] அடைந்து மரணத்தை வெல்கிறோம். அதாவது பிறவ[illegible]றவர்கள் ஆகிறோம். ஏனெனில் ஆன்மாவைச சிந்திக்கும் போது உண்மையில் நாம் இறைவனையே நினைக்[illegible]றோம். இதனால் நாம் நம்மில் இறைவனைக் காண்[illegible]றோம். அனைத்தையும் இறைவனால் நிறைப்பதற்கு இது ஒரு வழியாகிறது. முதலில் நம்மில் இறைவனை நிறை[illegible]தால் மட்டுமே அனைத்திலும் இறைவனை நிறைக்க முடியும்.

சுவாமி விவேகானந்தர்

# சிவராமின் படு கொலைக்கு அரசியல் கட்சிகள் கண்டனம்

(கொழும்பு)

பிரபல தமிழ் ஊடகவியலாளர் தராக்கி என்று அழைக்கப்படும் சிவராம் கடத்தப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வன்மையாக கண்டித்துள்ளார்.

ஜனநாயகத்தை பாதுகாக்கும் அரசாங்கம் என்ற வகையில் மிலேச்சத்தனமான இத்தகைய கொலையை நாம் வன்மையாகக் கண்டித்துள்ளோம்.எந்தவொரு ஊடகவியலாளரும் ஊடகத்தைப் பயன்படுத்தும் போது அரசியல் பேதங்களை வெளியிடும் சுதந்திரம் இருக்கவேண்டும். சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு இத்தகைய ஈனத்தனமான செயல்கள் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைகின்றது என பிரதமர் தெரிவித்துள்ளார்.

சிவராம் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டமைக்கு பொறுப்பானவர்களை இனங்கண்டு தராதரம் பாராது சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய துரதிஷ்டமான சம்பவங்கள் இனிமேலும் தொடராதவாறு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென பிரதமர் உறுதியளித்துள்ளார்.

அதேவேளை ஊடகவியலாளர் சிவராமின் கொலையை கண்டித்து ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவும் கண்டனம் வெளியிட்டுள்ளார். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

சிவராமின் கொலையை ஐக்கியதேசியக் கட்சியும் வன்மையாகக் கண்டித்துள்ளது. மக்கள் நடமாட்டம் உள்ள பிரதேசம் ஒன்றிலிருந்து சிவராம் கடத்திச் செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டிலிருந்து அரசாங்கம் தப்பிக்கொள்ள முடியாது என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.இவரின் படுகொலையினை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவர் ரவூப்ஹக்கீம் மற்றும் ஜப்பான் நாட்டின் சார்பில் ஜப்பானியத்தூதுவர் அக்கியோ சூடாவும் கண்டித்துள்ளனர். (ச-8,4)

# சிவராமின் படுகொலைக்கு அரசே முழுப்பொறுப்பு

## தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அநீதியாளர்களுக்கு அஞ்சாது துணிச்சலுடன் குரல்கொடுத்த மூத்த பத்திரிகையாளரின் கொலைச்சம்பவத்திற்கு முழுப் பொறுப்பினையும் அரசாங்கமே ஏற்கவேண்டுமென யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மூத்த பத்திரிகையாளர் டி.சிவராம் படுகொலைசெய்யப்பட்டமையைக் கண்டித்து வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடத்திக்கொலை செய்யப்பட்ட மூத்த பத்திரிகையாளர் டி.சிவராம் அவர்களின் கொலைச்சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழ் இனத்தின் இன்னல்களையும் பேரினவாதத்தின் இழைக்கப்படுகின்ற அநீதிகளையும் உலகிற்கு எடுத்துக்காட்டிய உன்னத மனிதரை தமிழ் மக்கள் இழந்து தவிக்கின்றனர்.

'அடக்கு முறைகளும் அநீதிகளும் தமிழ் மக்கள்மீது திணிக்கப்படும். தமிழர்கள் வாய்பொத்திகளாக அடங்கிவாழவேண்டும் இதுதான் பேரினவாதிகள் காலம் காலமாக காட்டிவரும் நிலைப்பாடு'.

தமிழ் பத்திரிகையாளர்கள் இன்னல்களுக்கும் இடர்பாடுகளுக்கும் மத்தியில் குரல்கொடுப்பவர்கள். அடிமைத்தனத்திற்கு எதிரான அவர்களின் குரல்கொடுப்பில் தான் தேசம் , விடிவைநோக்கி நகர்கின்றது.

காலம் காலமாக தமிழ் மக்கள சிங்கள இன வெறியர்களின் இரும்புக்கரங்களினுள் நசிக்கப்படுவதை உலகிற்கு எடுத்துக்காட்டிய நிமலராஜன்,நடேசன்போன்ற பத்திரிகையாளர்களை கொலைசெய்த பேரினவாத அரசு தமிழ்த்தேசியத்திற்காக குரல் கொடுத்த சிவராம் அவர்களை பலமுறை அச்சுறுத்தி பின்கடத்தி கொலைபுரிந்து இருக்கிறது.இந்த கொலைச்சம்பவத்தை மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

(ச)

## யாழ்...

சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனை வழங்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடவுள்ளனர்.

ஊடகவியலாளரின் உரிமைகளைப் பாதுகாக்க அணிதிரளுமாறு யாழ். மாவட்ட ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே. தசெல்வம் தெரிவித்துள்ளார். (த)

## சிவராமின் படுகொலைக்கு...

பிரிவைச் சேர்ந்த தமிழ்ப் பொலிஸ் அதிகாரி ரி.ஜெயரட்னம் கொழும்பில் வைத்து கடத்தப்பட்டார். அதற்கு முன்னர் கிழக்கில் மாவட்டச் செயலாளர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

சிவராம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக அரசாங்கம் பூரண விசாரணைகளுக்கு உத்தரவிடுவதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## கடத்திச்செல்ல...

சம்பவம் தொடர்பாக தலங்கம பொலிஸாருக்கு கிடைத்த அநாமதேய தொலைபேசிஅழைப்பை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் நேற்றுக்காலை சடலம் மீட்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த சிவராமின் மனைவி யோகராணி (வயது 43), மகள் வைஷ்ணவி (வயது 16), வைதேகி (வயது 13), மகன் சேரலதன் (வயது 10) ஆகியோர் சடலத்தை அடையாளம் காட்டினர். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் ரேமண்மரச்சாலையில் வைக்கப்பட்டு நேற்று இரவு 8மணியளவில் குடும்பத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதேவேளை படுகொலைச்சம்பவம் தொடர்பாக இரண்டு பிரதிபொலிஸ்மா அதிபர்கள் தலைமையில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் சந்திரபொர்னாண்டோ தெரிவித்துள்ளார். (இ)

## சிவராம் படுகொலை...

பலதடைகைகளில் இராணுவப் புலனாய்வுத் துறையின் கொலை மிரட்டல்களை எதிர்நோக்கியிருந்தார். அவருடைய கொழும்பு இல்லமும் சோதனைக்கு உள்ளாகியது இந்தப் படுகொலையானது கொழும்பின் உயர்பாதுகாப்பு பகுதி அருகே நடைபெற்றுள்ளது.

எனவே இந்தக்கொலைக்கு அரசும் அதன் படைகளுமே பொறுப்பாளிகள் என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-4)

## சிவராமின்கொலையை...

பொலிஸ்மா அதிபர் ஒருவரின் கீழ் இவ் விசாரணை நடவடிக்கைகள் நடைபெறவுள்ளன. பம்பலப்பிட்டி உணவகம் ஒன்றிலிருந்து சிவராம் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக 20 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இந்த விசாரணைகளின் மூலம் சிவராமைக்கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்தை இனங்காண்பதே முதற்பணியாகும்.

80 மில்லிமீற்றர் துப்பாக்கியே இந்தக் கொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் துப்பாக்கிப் பிரயோகத்தை யார் செய்தார்கள் என்பது இதுவரை தெரியவரவில்லை என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் இரவு கடத்திச் செல்லப்பட்ட சிவராம் நேற்றுக் காலை பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகேயுள்ள இலங்கை ஜப்பான் நட்புறவு வீதியிலிருந்து சடலம் மீட்கப்பட்டது. சிவராமின் சடலத்தை அவரது துணைவியாரும் பிள்ளைகளும் அடையாளம் காட்டினர் என அவர் மேலும் கூறினார்.

(ச-8)

# சுனாமிப் பேரலை நிவாரணத்திற்கென வெளிநாட்டு தூதரகங்கள் நிதி அன்பளிப்பு

(கொழும்பு)

பல்வேறு நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் ஊடாக சுமார் 600மில்லியன் ரூபாவை ஆழிப்பேரலை நிவாரணமாக இலங்கை பெற்றுக்கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

பல தரப்பட்ட நன்கொடையாளர்கள் தங்களது நிதியில் இலங்கைத் தூதரகங்களில் கொடுத்து உதவுவதாக அவர் தெரிவித்தார்.

காலியில் வளந்துவையில் நேற்று நடைபெற்ற வீட்டு நிர்மாணத்திட்ட ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இதனைத் தெரிவித்தார். இந்நிதியைக் கொண்டு 250வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டங்கள் நான்கினை நடைமுறைப் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இச்செயற் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு தேவையான பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே இந்தச் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பமாகும். இதுதொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்துமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-4)

# பயங்கரவாத பட்டியலில் புலிகளின் பெயர் இணைப்பு

(கொழும்பு)

அமெரிக்காவினால் 2005ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பயங்கரவாதப்பட்டியலில் தமிழீழவிடுதலைப்புலிகளின் அமைப்பின் பெயரும் நான்காவது தடவையாக இணைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இணையத்தளம் ஒன்றில் வெளியிடப்பட்ட செய்தியொன்றில் தமிழீழவிடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொண்ட போதும் நடைபெறும் கொலைகள் மற்றும் வன்முறைச்சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-4)

## ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக வறுமையொழித்தல் தொடர்பான ஆய்வரங்கு எதிர்வரும் 3ம்திகதி செவ்வாய்கிழமை காலை9.30மணிமுதல் பிற்பகல் 4.30மணி வரை மாவட்டசெயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-19)

## பிரமாண்டமான...

மக்கள் பங்குபற்றுவதற்கான இலவச போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மே நாள் எழுச்சிப் பேரணி நல்லூர் முருகன் ஆலய முன்றலில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். இதில் கலந்துகொள்வதற்காக தீவுக் கோட்டத்திலிருந்து வரும் மக்கள் கோவில் வீதி வடபுறத்திலும், வடமராட்சிக் கோட்ட மக்கள் பருத்தித்துறை வீதி தெற்கு செட்டி வீதியிலும் தென்மராட்சிக் கோட்ட மக்கள் முத்திரைச் சந்தியிலும் யாழ். நல்லூர் கோட்ட மக்கள் வைமன் வீதியிலும் காரைநகர் பிரதேச மக்கள் வீரமாகாளி அம்மன் முன்றலிலும் சங்கானை சண்டிலிப்பாய் பிரதேச மக்கள் தியாகி திலீபன் தூபி முன்றலிலும் உடுவில் தெல்லிப்பளை அச்சுவேலி கோப்பாய் பிரதேச மக்கள் கோவில் தெற்கு புறத்திலும் தரித்து நிற்பர்.

பின்னர் பேரணி ஆரம்பமாகி அரசடிச் சந்திவீதியூடாக கந்தர்மடச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தியூடாக ஆடியபாதம் வீதி ஊடாக சென்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தைச் சென்றடைந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுக்கூட்டம் முடிவடைந்ததும் மக்கள் திரும்புவதற்கான வாகனங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தீவகக் கோட்டம் கலட்டிச் சந்தி பிறவுண் வீதியிலும், வடமராட்சிக் கோட்டம் திருநெல்வேலி சந்தி கல்வியங்காட்டு வீதியிலும், தென்மராட்சிக் கோட்டம் பொற்பதி வீதியிலும், காரைநகர் சண்டிலிப்பாய், சங்கானை பிரதேசத்திற்கு ஆடியபாதம் வீதியிலும், கோப்பாய், அச்சுவேலிப் பிரதேசங்களுக்கு பலாலி வீதியிலும், உடுவில் தெல்லிப்பளைப் பிரதேசங்களுக்கு பிறவுண் வீதியிலும் (கல்வாரி தேவாலயம் முன்பாக), யாழ். நல்லூர்ப் பகுதிகளுக்கு திருநெல்வேலிச் சந்தி பலாலி வீதி (யாழ்ப்பாணப் பக்கம்) ஆகிய வாகன தரிப்பிடங்களில் இருந்து மக்கள் தமது இடங்களுக்கு திரும்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாக சாந்தியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இவ் ஆண்டு மே தினப் பேரணியை வெகு சிறப்பாக முன்னெடுக்க விரிவான ஏற்பாடுகள்யாவும் செய்யப்பட்டுள்ளதால் குறிப்பிட்ட நேரத்திற்கு பேரணி ஆரம்பமாகும். இப் பேரணியில் கலந்து கொள்ளும் பொதுஅமைப்புக்கள், தொழிற் சங்கங்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் அனைவரும் காலதாமதமின்றி வருகை தருவதுடன் தங்களால் எடுத்து வரப்படும் ஊர்திகள் முன்கூட்டியே கொண்டு வந்து சேர்க்குமாறு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது. (ச)

# சிறுவன் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுமாலை மினி பஸ்- சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் கிளிநொச்சிவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிகசிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிருஸ்ணபிள்ளை சேகர்(வயது 16) என்ற சிறுவனே விபத்தில் படுகாயமடைந்தவர் ஆவார். (4,8)








இப் பத்திரிகை வலம்புரி அச்.கோ.ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.